பக்கங்கள் 8

ஈழநாடு
EELANAADU
50 சதம்

மலர் 22 | புரட்டாதி 10 | ஜுல்-கஃ 15 | இதழ் 227
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 26 - 9 - 80

1980-9-26 PERIODICALS DIVISION

## பாராளுமன்றத்தினுள் சிறிமாவுடன் நுழைய முயற்சி
### பொலிசார் விரட்டினர்

(கொழும்பு)
முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடன் நேற்று பாராளுமன்றத்திற்குள் நுழைய முயன்ற ஒரு குழுவினரைப் பொலிசார் தடுத்து நிறுத்தினர்.

காலஞ்சென்றபிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிரார்த்த தினத்தையொட்டி பாராளுமன்ற வளவில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்த பின்னரே சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் சிலர் திருமதி பண்டாரநாயக்காவுடன்பாராளுமன்றத்திற்குள் நுழைய முயன்றனர். (இ)

★ போரை நிறுத்த ஈராக் நிபந்தனை ★ ஜிம்மி கார்ட்டர் கோரிக்கை ★ ஈரானிய பரசூட் வீரர்கள் படுகொலை

# ஈராக் தலைநகர்மீது மீண்டும்
# ஈரான்விமானங்கள்குண்டுவீச்சு

## நாடு பிடிக்கும் நோக்கம் இல்லை என்கிறது ஈராக்

லண்டன், செப், 25

ஈரான் போர் விமானங்கள் இன்று ஈராக் தலைநகரான பக்தாத் மீதும் அதை அடுத்துள்ள பல நகரங்கள் மீதும் மீண்டும் கோரத் தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது. இதே சமயம் ஈராக் படைகள் தரைமார்க்கமாக ஈரானுக்குள் வெகுதூரம் ஊடுருவல் நடத்தியுள்ளதாகவும் ஈரானியப் படைகளின் எதிர்த் தாக்குதல் இருந்தபோதிலும் ஈராக் படைகள் தொடர்ந்து முன்னேறிக் கொண்டு வருவதாகவும் ஈராக் அறிவித்துள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, ஈரான் மண்ணைக் கைப்பற்றும் நோக்கம் எதுவும் ஈராக்குக்குக் கிடையாது என்றும் ஈராக்கின் இலட்சியங்களை ஈராக் ஏற்றுக்கொள்ளும்வரை தமது படைகள் ஈரான்மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தும் என்றும் ஈராக் பாதுகாப்புஅமைச்சர் தெரிவித்துள்ளார்.

''அல்-அராப்' கால்வாயில் ஈரானுக்கு பூரண இறைமை வழங்கப்பட வேண்டும்'' என்பது உட்பட மூன்று நிபந்தனைகளை போரை நிறுத்துவதற்கு ஈராக் விதித்துள்ளது.

### அபடான் ஈரான் வசம்

இதேவேளையில் ஈரானிலுள்ள மிகப் பெரிய எண்ணெய்க் சுத்திகரிப்பு நிலையமான அபடான் தொடர்ந்தும் தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதென்று ஈரான் அறிவித்துள்ளது. ஈரானில் பெற்றோல் விற்பனையும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பாக்தாத் மீது ராக்கட் தாக்குதல்

குறைந்த பட்சம் நான்கு ஈரானிய ஜெட் விமானங்கள் இன்று அதிகாலையில் ஈராக் தலைநகர் மீது ராக்கெட்டினால் தாக்கின என்றும், இத்தாக்குதலினால் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையொன்று பலத்த சேதத்துக்குள்ளானதென்றும் பாக்தாத்திலிருந்து வெளியான செய்தியொன்று தெரிவிக்கிறது.

### உலகப் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தல்

ஈரான்—ஈராக் யுத்தத்தினால் உலகத்தின் பொருளாதார நிலையை அச்சுறுத்தக்கூடிய அளவிற்கு எண்ணெய் விநியோகம் தடைப்படக்கூடுமென அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் வெள்ளை மாளிகையில் செய்தி நிருபர்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். ஹோர்மஸ் நீரிணை கப்பற் போக்குவரத்திற்காகத் திறந்து வைக்கப்படவேண்டுமென்றும் அவர் வலியுறுத்னர்.

### எகிப்தினால் எதுவும் முடியாது

ஈரான்—ஈராக் யுத்தத்தைபிட்டு எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் நிருபர்களிடப் கருத்துத் தெரிவிக்கையில், மத்திய கிழக்கில் இந்த யுத்தம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென்றும், மேற்கத்தைய நாடுகளுக்கு ஓர் அச்சுறுத்தலாக அமையுமென்றும், இந்த யுத்தத்திற்கு எகிப்தினால் அதிகம் எதையும் செய்யமுடியாதுள்ளது என்றும் கூறினர்.

### 90 டாங்கிகள் சேதம்

ஈரானுக்குள் ஊடுருவல் நடத்திய ஈராக் படைகள் வசமிருந்த 90 டாங்கிகளை ஈரானியப் படைகள் சேதப்படுத்தியும் கைப்பற்றியும் உள்ளன என்று ஈரான் தெரிவித்துள்ளது.

### 19 ஈரானிய 'ஜெட்' சுடப்பட்டன

ஈராக்குள் தாக்குதல் நடத்திய 19 ஈரான் 'ஜெட்' ...

(8ம் பக்கம் பார்க்க)

## தப்பிப் பிழைத்த மெயில் ரயில்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த மெயில் ரயில், இரண்டு இடங்களில் தப்பிப் பிழைத்தது!

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி நேற்று முன்தினமிரவு புறப்பட்ட மெயில் வண்டி, கல்கமுவ ரயில்நிலையத்தின் அருகே மரம் ஒன்று ரயில்பாதை மீது விழுந்ததால், ரயில்வண்டி தக்க நேரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு, விபத்துத் தவிர்க்கப்பட்டது. இதன் பின்னர் கிளிநொச்சிக்கும், பரந்தனுச்குமிடையே மெயில் ரயில், எதிர்பாராதவிதமாக பெட்டிகள் கழற்றப்பட்ட நிலையில் என்ஜினும், சில ரயில்பெட்டிகளும் முன்செல்ல ஏனைய ரயில் பெட்டிகள் தொடர்ந்து செல்லாது ரயில் பாதையில் 'அநாதை'யாக விடப்பட்டிருந்தன. இந்தநிலை சில மணி நேரம் நீடித்தது. இறுதியில் 'தவறு' உணரப்பட்டு என்ஜின் பின்னோக்கி வந்து, மிகுதிப் பெட்டிகளை இணைத்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது!

## ஜி. சி.ஈ. உயர்தரபரீட்சைகள் மீண்டும் நடைபெறாது

(கொழும்பு)

கடந்த ஏப்ரலிலும் ஆகஸ்டிலும் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தரபரீட்சைகள் மீண்டும் நடத்த தேவையில்லை என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இப்பரீட்சைகளின் விடைத் தாள்கள் அண்மையில் வெளியாகியதால் அரைவீத பரீட்சார்த்திகளே பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மீண்டும் இப்பரீட்சைகளை நடத்த வேண்டிய தேவையில்லை என்றும் அமைச்சரவை பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு உரிய நிவாரணம் அளிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினர்.

இதே வேளையில் பரீட்சை விடைத்தாள்கள் வெளிவந்தது தொடர்பான விசாரணைகள் இன்னும் ஓரிரு தினங்களில் முடிவடைந்துவிடும் என்று இரகசிய பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை 1100 தமிழ் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை விடைத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிசார் தெரிவித்தனர். (இ)

## சுந்தராம்பாளுக்கு மக்கள் கண்ணீர் அஞ்சலி!

சென்னை, செப். 25

கடந்த இரவு தனியார் மருத்துவமனையில் காலமான இசைமேதை கே. பி. சுந்தராம்பாளின் பூதவுடல் தியாகராஜ நகரில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

பெருந்திரளான மக்கள் அங்குசென்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த இசைமேதைக்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி உட்பட பல தலைவர்கள் தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

(செய்தி விபரம் உள்ளே)

### யாழ். லயன்ஸ் கழகத்தின்
## கைத்தொழில் கருத்தரங்கு இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஆதரவில், இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும், தொழில் திணைக்களத்தின் தொழிற்சாலைப் பொறியியல் பகுதியும் இணைந்து நடாத்தும் இரண்டு நாள் கருத்தரங்கு, இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் முழு நாள் நிகழ்ச்சியாக யாழ்ப்பாணச் செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெறும். கருத்தரங்கில், வருமான வரித் திணைக்களம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் சிறப்புரையாற்றுவர்.

கருத்தரங்கை முன்னைநாள் லயன்ஸ் கழக உதவி மாவட்ட ஆளுநர் டாக்டர் யோகு பசுபதி ஆரம்பித்து வைப்பார். ஆரம்ப உரையைத் தொழில் திணைக்களப் பதில் ஆணையாளர் திரு. எஸ். சிவபாஸ்கரனும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்தியப் பதில் ஆணையாளர் திரு. அன்ரன் பெர்னாண்டோவும் நிகழ்த்துவர்.

இன்றைய நிகழ்ச்சிகள்: காலை 9-45—11-00 தொழில் பாதுகாப்பும், சுகாதாரமும்- திரு. ஐ. எஸ். சிவபாஸ்கரன் (தொழில் திணைக்களப் பதில் ஆணையாளர்), 11-00—12-00 கைத்தொழிற்பேட்டை அறிமுகம்-திரு. டபிள்யு. ஈ. பெர்னாண்டோ (அதிபர்-தொழிற் பேட்டை), 12-00—1-00 மதிய உணவு (மில் அதிபர் திரு. இராஜரட்னம்), 1-30—2-45 ''கைத்தொழிலாளர்களுக்கான வரிச்சலுகைகள்'' — எஸ். சுப்பிரமணியம் (வருமானவரி பதில் ஆணையாளர்) 2-45—4-00 தொழிற்சாலை சுகாதாரம் — டாக்டர்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பீச் றோட்டில் சகல நவீன வசதிகளும் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீட்டுடன் நான்கு பரப்புக்காணிவிற்பனைக்குண்டு விலைஇரண்டரை லட்சத்திற்கு மேற்பட, 3, கவுன்சில் லேன், தெஹிவளை. 6918

தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. நான்கு சோடி கதவு நிலைகளும்உண்டு. விபரங்கட்கு 66, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை தொலைபேசி இல: 7728. (6922)

நல்லஇன செவ்விளநி தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு மில்க்வைற், யாழ்ப்பாணம். 6876

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 09-10-1980-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. செங்குந்தா சந்தையில் மலகூடம் மாற்றம் செய்தல்.
2. மணிக்கூட்டு வீதி ஒழுங்கையில் வடிகால் அமைத்தல்.
3. பாசையூர் மக்கிக்குளம் அணைச்சுவர் அமைத்தல்.
4. கற்குளம் அணைச்சுவர் அமைத்தல்.
5. நாவாந்துறை கடற்கரை வீதி மதகு அமைத்தல்.
6. அரியாலை சனசமுகநிலைய மலகூடம்.

கேள்விப்பத்திரங்கள் மாநகராட்சி மன்றத்துடனே அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களுடனே ரூபா 50,000 -க்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும்.

ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப்பணமாக ரூ. 100/-ம், மீள்ளிக்கப்படாத கேள்விப் பத்திரக்கட்டணமாக ரூ.25/-ம் செலுத்தியன் பேரில் 06-10-80-ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணி வரை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்கள் மீது கேள்விகள் இருபிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,

வேலைப்பகுதி,
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்,
24-09-1980. 6920

## யாருடையது?

யாழ்.காரைநகர் பஸ்ஸில் (782) கண்டெடுக்கப்பட்ட சிறுவர் அணியும் சப்பாத்து ஒன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்,

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# "ஆசிரியர் கடமை தவறினால் சமுதாயம் சீர்குலையும்"

## பிரிவுபசாரவைபவத்தில் அதிபர்

(யாழ்ப்பாணம்)

''சமுதாய வளர்ச்சி ஆசிரியர் கையில்தான் உண்டு. ஆசிரியர் தமது கடமையில் தவறினால் சமுதாய மேசிர் குலையும். சிறார்களிடையே ஒழுங்கு, நற்பண்பு போன்றவற்றைப் புகுத்தி, நாளைய சமுதாயத்தைக் கட்டி வளர்க்கும் பொறுப்பு எமதாகும். ஆசிரியர் சீரிய கொள்கைகளை இறுகப் பிடித்து மாணவனை மையமாக வைத்து மாணவனை மதித்து கடமையைச் சரிவரச் செய்தால் சமுதாயத்தில் ஆசிரியருக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். இதுவே எமது கல்லூரிகளை உயர் நிலைக்குக் கொண்டு செல்லும். அருணோதயக்கல்லூரி சிறப்பான நிலைக்கு வந்ததற்கு மூலகாரணம் ஆசிரியரதும் மாணவரதும் பெற்றோரதும் கூட்டுமுயற்சியும் பரஸ்பர அன்பு ஆகும்.''

இவ்வாறு அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கடந்த 31 மாதங்கள் அதிபராகப் பணியாற்றி நைஜீரியாவில் ஆசிரியப்பணி செய்வதற்காக அண்மையில் இளைப்பாறிய திரு. வி. சிவசுப்பிரமணியம் தமக்கு ஆசிரியர் கழகம், அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்கள் கூட்டாக அளித்த பிரிவுபசார விருந்து வைபவத்தில் பேசும்போது கூறினார்.

திரு. சிவசுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில், பெருந்தொகையான பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் எதுவிதமான வசதியும் இல்லாது வீண் சுமையைச் சுமக்கின்றார்கள் என்றும் இதனால் நிர்வாகச் சீர்கேடு, ஒழுங்கீனம் ஆகியவற்றை வளர்ப்பதை அராங்கம் கவனியாதுபாராமுகமாயிருப்பது ஆசிரியரிடையே தமக்குள்ள சம்பளக் குறைபாடு, பதவி உயர்வுக் குறைபாடுகளுடன் மேலும் விரக்தி ஏற்படுத்திப் பலரை வெளியேறச் செய்கின்றது என்றும் பாடசாலைகளைச் சீராக இயக்கி இக்குறைபாடுகளை அவசியம் தீர்க்கவேண்டுமெனவும் கூறினார்.

ஆசிரியர் கழகத் தலைவர் திரு. செ. இராசரத்தினம் வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது''ஓய்வு பெற்ற அதியர் அளவெட்டியில் ஒரு சிறப்பான கல்விப் பாரம்பரியத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், அன்னாரின் சிந்தனைத்தெளிவு, செயல் திறன், சாதுரியம் நிறைந்த சேவையை மதிப்பிடுவது கடினமென்றும் தனது இனிய சுபாவத்தினால் பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் வேறுபாடில்லாது ஒற்றுமைப் படுத்தி ஒரு முன்மாதிரியான முறயில் பாடசாலையை அபிவிருத்தி செய்தார் என்றும் கூறினார்.

காங்சேன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் தனது பாராட்டுரையில், அதிபர் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு யாவரும் ஒருமித்து வேலை செய்யக்கூடிய சூழ்நிலையை அளவெட்டியில் ஏற்படுத்தினார் என்றும் ஆசிரியரை மதித்து மாணவர் நலனை வளர்த்தாரென்றும் கூறினார்.

கல்வி அதிகாரி திரு. சி. சிவசுப்பிரமணியம், அபிவிருத்திச்சபைச்செயலாளர் திரு. அ. விசுவநாதன், ஆசிரியர் திரு. மு. சிவப்பிரகாசம், இளைப்பாறிய உதவிஅரசாங்க அதிபர் திரு, சொ. அருணாசலம், பண்டிதர் க. நாகலிங்கம், ஆசிரியர்கள் திரு. மு. சிவப்பிரகாசம், திரு. வே. ஆறுப்பிள்ளை, திரு. பா. பரநிருபசிங்கம், திரு. க. அருளம்பலம், திரு. அ. தம்பித்துரை, திரு. பொ. சோமசுந்தரம், திரு. மு. செல்லையா, தற்போதைய ஆசிரியர் திரு. ந. சிவபாதம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினார்கள்.

ஆரம்ப பாடசாலை மாணவர், உயர்தர வகுப்பு மாணவர்கள் வெவ்வேறான பிரியாவிடை நடத்தினர். ஞாபகார்த்தமாக பயன் தரும் மரங்களும் நாட்டப்பட்டன.

(அ)

# "தர்மங்களை மனப்பூர்வமாகவும் இதயசுத்தியுடனும்செய்தல்வேண்டும்'

(அரியாலை)

நாம் சந்தோஷமாக வாழ்வதுபோல பிறரும் வாழ நாம் உதவி செய்யவேண்டும். தர்மங்களை மனப்பூர்வமாகவும், இருதயசுத்தியுடனும் செய்யவேண்டும். மில்க் வைற் தொழில் ஸ்தாபனம் குளங்களைத் தோண்டி நீரைச் சேகரித்து விவசாயச் செய்கைக்கு பயன் படுத்தும்படி ஆலோசனை கூறுவதுடன், அதற்கு வேண்டிய உதவிகளையும் செய்து வருகிறது. அதுபோல நாட்டில்நல்ல மழைபெய்ய, மண்அரிப்பைத் தடுக்க மரங்கள் நடுங்கள் என்று கூறுவதுடன் மரக்கன்றுகளையும் இலவசமாக வழங்கி வருகிறது. இவ்வுதவிகள் யாவும் நம்மைப்போல பிறரும் சந்தோசமாகவும், சுபீட்சமாகவும் வாழவேண்டுமென்ற குறிக்கோள்களுடனே செய்யப்படுகின்றது.

இவ்வாறு சிவநெறிக்காவலரும் மில்க் வைற் தொழிலதிபருமான திரு. க. கனகராசா அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக இளைஞர் கலாமன்றம் நடாத்திய பௌர்ணமி விழாவில் திரு. க. கிருஷ்ணபிள்ளைக்கு முச்சக்கரவண்டியை அன்பளிப்புச் செய்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. பே. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றவிழாவில் செல்வன் இ. கருணாகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. க. கனகராசா தொடர்ந்து பேசுகையில் படித்தவன் முழுமனிதன். படிக்காதவன் அரைமனிதனாவான். நமது பிள்ளைகள் எதிர்காலத்தின் தலைவர்களாவர். ஆகவே அவர்களுக்குக் கல்வியறிவை நாம் போதிக்கவேண்டும். திருவள்ளுவநாயனார் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்றும், தர்மம் எப்படியாக அமையவேண்டும் என்றும், ஆட்சி எப்படி நிலவவேண்டும் என்றும், அதிகாரிகள் எப்படி ஆளுகை செய்யவேண்டும் என்றும், இன்னும் எத்தனையோ விடயங்களை எமக்குப் போதிக்கிறார். இதன்படிவாழ நாம் முயற்சிசெய்யவேண்டுமென்று குறப்பிட்டார்.

கவிஞர் வே. ஐயாத்துரை, டாக்டர் எம். சி. தில்லைநாயகம், திரு. மு. க. சிவராசா ஆகியோர் பேசினர். நிலையச் செயலாளர் திரு. தி. சிவானந்தன் நன்றி கூறினார். (க)


# மகாவலி அபிவிருத்திக் கண்காட்சி

(3-10-1980 தொடக்கம் 5-10-1980 வரை)

மகாவலி அபிவிருத்தி பற்றிய சிறப்பான கண்காட்சியினை,

கௌரவ

## காமினி திசாநாயக்க

அவர்கள்

(காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் அவர்கள்)

தமது முதலாவது யாழ்ப்பாண விஜயத்தின்போது,

யாழ். மத்திய கல்லூரியில் 3–10–1980-ல் காலை 10 மணிக்கு திறந்துவைப்பார்

பிரவேசம் இலவசம்! அனைவரும் வருக!!

— அரசாங்க அதிபர் அலுவலகமும், கல்வித் திணைக்களமும்.

யாழ்ப்பாணம். 6917


# நமசிவாய தேசிகருக்கு பாராட்டு

(மாவிட்டபுரம்)

''மரபு வழிக்கல்விக்கும்மரபு வழி அறிவுக்கும் மதிப்பளிக்கும் வகையில் எமது யாழ். பல்கலைக்கழகம் மரபுவழிவந்த பண்டிதர்களுக்கும் சிறப்புப் பட்டமளித்துக்கௌரவித்துள்ளது.

இதன் மூலம் யாழ்.பல்கலைக்கழகத்தினால் யாழ்.பல்கலைக்ழ்கம் மேலான சிறப்பைப் பெற்றுக் கொண்டுள்ளது.இவ்வாறு இலக்கண வித்தகர்,, என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட பண்டிதர்.இ,நமசிவாய தேசிகருக்கு தென்மயிலை பாலர் ஞானோதய சங்கம் எடுத்த பாராட்டு விழாவில் பேசிய பலாலி ஆசிரியகலாசாலை விரிவிரையாளர் திரு.க.சச்சிதானந்தன் கூறினார்.

தென் மயிலை ஞானோதைய வித்தியாசாலை மண்டபத்தில் திரு.சி.நாகலிங்கம்தலைமையில் நடந்த இவ் விழாவில் அவர் மேலும்கூறிபதாவது:—பண்டிதருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு எமது பாரம்பரியமான தமிழ் மொழியின் இலக்கண இலக்கியத்திற்கு உழைத்த புலவர் பண்டிதர் பரம்பரையினருக்கு அளித்தசிறப்பாகும். பண்டிதர் நமசிவாய தேசிகரது வித்துவத்தன்மை வெறும் படிப்பினால் மட்டுமல்ல இயற்கையாகவே வந்து விட்டது. இவரைப் போன்றோரை நாம் காண்பது அரிது'' என்றார்.

மற்றும் பலரும் பேசினர். பண்டிதர் நமசிவாய தேசிகர் இறுதியில் பதிலுரை நிகழ்த்தினர். (இ)

## யாழ்ப்பாணக் கல்லூரி

# தொழில்நுட்ப நிறுவன ஸ்தாபகதினம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தின் ஸ்தாபக தினம் இன்று மாலை மேற்படி நிறுவனத்தில் கொண்டாடப் படவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர்களாக திரு. றிச்சாட் என். எட்மண்ஸ், வண. கலாநிதி றெல்வர்மூக் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்நிறுவனத்தில் கற்று வெளியேறும் 1979, 1980 ம் ஆண்டு பயின்ற 79 மாணவர்களுக்கு இவ்வைபவத்தின் போது சான்றிதழ்களும், டிப்பிளோமாப் பட்டங்களும் வழங்கப்படும். இம்மாணவர்களில் 21 பேர் விவசாய பிரிவிலும், 58 பேர் பொறியியல் பிரிவிலும் கல்வி பயின்றவர்களாவர்.

1974 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனத்தில் தற்போது நான்குவகையான தொழில் நுட்ப கற்கை நெறிகளும், நான்குவகை கைவினைக் கற்கை நெறிகளும் பயிற்றப்படுகிறது. இந்நிறுவனத்தில் இவ்வருடமே மாதத்தில் பொறியியல் பிரிவிற்கு 129 மாணவர்களும், மருதனமடத்திலுள்ள விவசாயப் பிரிவிற்கு 14 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிறுவனத்தின் திட்டங்கள் முற்றாகப் பூர்த்தியாவதற்கு சுமார் 10 வருடங்கள் செல்லுமெனக் கூறப்படுகிறது. பதினைந்து பேர் கொண்ட சபையொன்று இந்நிறுவனத்தின் வளர்ச்சி குறித்து அமைக்கப்பட்டுள்ளது. இச்சபையில் கல்விமான்களும், பொறியியலாளர்களும், கைத்தொழிலாளர்களும் அங்கத்துவம் வகிக்கிறார்கள். தொழில் நுட்ப கல்வியானது இன்று உலகின் பல பாகங்களிலும் துரிதமாக வளர்ச்சியடைந்துவருகிறது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தொழில் நுட்ப கல்வியானது ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

நெதர்லாந்து அரசாங்கம் இத்தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. இந்நிதியுதவி இத்தொழில் நுட்ப நிறுவனத்திற்கு அலுவலகம், நூல் நிலையம், மாணவ விடுதிகள், மண்டபம், ஆசிரியர் தங்குமிடங்கள் போன்றவை அமைக்கப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையில் தொழில் நுட்ப துறை சம்பந்தமான பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பல திட்டங்களையும் இந்நிறுவனம் வகுத்துவருகின்றது.

மத்திய கிழக்குநாடுகளிலும் ஏனைய வெளிநாடுகளிலும் எமது மாணவர்கள் தொழில் நுட்பத்துறையில் வேலைவாய்ப்பைப்பெறுவதற்கு இந்நிறுவனத்தில் பயிற்றப்படும் தொழில் நுட்பக்கல்வி பெருமளவில் உதவுகின்றது.' இந்நிறுவனத்தில் பயின்ற மாணவர்களில் பலர் உள்நாட்டிலும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

இத்தொழில் நுட்பநிறுவனத்தின் அதிபராக திரு. எஸ். இராஜநாயகம் கடமையாற்றிவருகிறார். இவர் தந்தி தொலைத்தொடர்பு பிரதம பொறியிலாளராக முன்பு கடமையாற்றியுள்ளார்.

வெளிநாடுகளில் தொழில் நுட்பக்கல்வி சம்பந்தமாக நடைபெற்ற பல கருத்தரங்குகளிலும் இவர் பங்குபற்றியுள்ளார்.


## யாருடையது?

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள கடையொன்றில் தவறவிடப்பட்டுள்ள திறப்புக்கோர்வையொன்று கடை உரிமையாளர் திரு. சி. சுப்பிரமணியத்தினால்'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இரவுநேரத்தில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பலவற்றை நீ காண்கின்றாய். ஆனால் சூரியன் உதிக்கும் பொழுது நீ அவற்றைக் காண்பதில்லை. ஆகையினாலேயே பகற் பொழுதிலே வானத்திலே நட்சத்திரங்களே இல்லையென நீ சொல்லிவிடலாகுமா? மானுடா உன்னிடம் அஞ்ஞானம் இருக்கின்ற நாளிலே நீ இறைவனைக் காணமுடியாத காரணத்தால் இறைவனே இல்லை என்று பகராதே.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

## நமது நோக்கு

### யாழ்ப்பாண மீன்பிடி அபிவிருத்தி

பலதுறைகளிலும் தொழில்களிலும் யாழ்ப்பாணம் அடையவேண்டிய முன்னேற்றம், காணமுடியாதிருப்பது விசனத்துக்குரியது. அரசும், அரசின் அமைச்சர்களும் இங்கு வரும்போதெல்லாம் சந்திரனையே வானத்திலிருந்து பிடித்துத்தருவதாக ஆசை வார்த்தை பேசிப்போவது வழக்கம்.

குடாநாட்டின் மீன்பிடி அபிவிருத்தியைப்பற்றி மீன்பிடி அமைச்சர் அளவு கடந்தவாக்குறுதிகள் அளித்திருக்கின்றார். சில சிறு சலுகைகள் கிடைக்காமலில்லை. ஆயினும் மிகமுக்கியமானது மீனவர்களின் பொருளாதாரம். அவர்களின் பொருளாதாரம் அவசியம் உயர்த்தப்படவேண்டும். இதனையொட்டி அவர்கள் வாழ்வில் பல குறைகள் உண்டு.

சிறப்பாகச் சந்தைப்படுத்தலுக்கான வசதிகள் இன்னும் பெருமளவு குறைவாகக் காணப்படுகின்றன. ஏறக்குறைய இப்பணி பத்துச் சங்கங்களினாலே மேற்கொள்ளப்படுகின்றது. தொழிலில் ஈடுபடும் மக்களுக்கு குடியிருப்பு வசதிகள் தொடர்ந்து செய்துகொடுக்கப்படவேண்டும். குடாநாட்டினைப் பொறுத்தவரை பெருமளவு நிலம் முடிக்குரிய நிலமாகக் காணப்படினும் அதனைப் பகிர்ந்தளிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன், வீடுகளைநிர்மாணித்துக்கொள்ள ஏற்றபண வசதியளிக்கவேண்டும். கடலில் ஏற்படக்கூடிய அபாயங்களுக்கு பன்முறைப்பட்ட திட்டம், மூலம் உபகரணங்களும் நிவாரணமும் உதவவேண்டும்.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீன்பிடிக் கைத்தொழில் வாய்ப்பேச்சளவில் வளர்ச்சியடைவதுபோல் தோன்றினாலும் அது மந்த நிலையில் தேங்கிக்கிடப்பது கண்கூடு. சாதாரண மீனவனின் கடின காப்புறுதியற்ற வாழ்வில் கணிசமான மாற்றம் ஏற்படவில்லை.

எத்தனை பாரியதிட்டங்களுக்குப் பொருத்தமான நீர்வளம், ஆற்றலும், ஆர்வமுமுள்ள மனிதவளம் நிரம்ப இருந்தபோதும் ஆட்சியாளரின் அசமந்தப் போக்கு முன்னேற்றத்துக்கு வழிகோல உதவவில்லை.

பாகுபாடான கொள்கைகள் இம்மாநிலத்தைப்பாதிக்கின்றனவோ என்று எண்ண அரசாங்கம் இடமளித்து வந்திருக்கிறது. ஆயினும் எமது மீன்வளத்தை இப்பகுதி மக்கள் தக்க கூட்டுறவு முறையில் பயன்படுத்தத்தவறுவது எங்கள் குற்றமென்பதை நாம் உணரவேண்டும். நாமே அந்தச் சீர்கேட்டுக்குப் பொறுப்பானவர்.

பேசாலை போன்ற இடங்களில் பதனிடும் ஆலை பட்டபாடும், வேறு அரசாங்கத் திட்டங்கள் மக்கள் ஆதரவின்றி மடிந்துபோன அனுபவமும், இத்துறையின் விருத்தியும், வளர்ச்சியும் மக்கள் கையிலேதான் தங்கியிருப்பதை விளக்குகின்றன.

எதற்கும் அரசாங்கத்தை நம்பியிருக்காமல், தங்களுக்குள்ளே போட்டி, சுரண்டல் முதலிய சமூக ஊழல்களைத் தீவிரமுறையில் தவிர்த்து எமது தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் எமது மனித வளத்தைப் பயன்படுத்தி முன்னேற முயற்சி செய்வது இன்றைய வேலையில்லா அவலநிலையில் அவசியமாகின்றது.

எமது புவியியலாளர்கள் திறமைசாலிகள். எமக்கு விஞ்ஞான ஆய்வுகளை வழங்கி, மீன்பிடித் தொழிலில் இளஞ் சமூகத்தினரை ஊக்குவிப்பார்களானால், நாங்கள் அரசாங்கத்துக்கு அடிபணியவோ வால்பிடிக்கவோ தேவையில்லை. தொழிலும், தொழில்நுட்ப ஆராய்ச்சியினால் நிலைபெற வழிபிறக்கும்.

"மாவட்டஅபிவிருத்திச்சபைக்காக

# அரசுடன் நாம் ஒப்பந்தமோ பேச்சுவார்த்தையோ நடத்தவில்லை"

## புத்தூரில் அமிர் உரை

(நெல்லியடி)

"தமிழ் பேசும் மக்கள் தமக்குச் சட்டபூர்வமாகக் கிடைக்கின்ற உரிமைகளைப் பயன்படுத்தி தமது பாரம்பரியமான நிலத்தை பாதுகாப்பதும் அதனை அபிவிருத்தி செய்வதும் தவறாகாது. மாவட்ட அபிவிருத்திச்சபைகள் எமக்குக் கிடைத்த சட்டபூர்வமான உரிமைகளில் ஒன்றாகும்".

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் புத்தூர் சந்திக்கருகாமையில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவுவிழாவில் பேசுகையில் கூறினார்.

திரு. ந. தில்லைச்சிற்றம்பலம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தந்தை செல்வாவும் அமரர் வன்னியசிங்கமும் பிரதேச சபைகள் மாவட்ட சபைகள் பெற ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகளை நடாத்தினர்கள். ஆனால் மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்காக நாம் எந்தவொரு பேச்சுவார்த்தையையும் ஒப்பந்தத்தையும் அரசாங்கத்துடன் செய்துகொள்ளவில்லை. பிரதேச சபைகளுக்காக பண்டா செல்வா ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டதனை மக்கள் நன்கறிவார்கள்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் நமது மண்ணைக் காக்கமுடியும். பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்ற கருத்தின் அடிப்படையிலே அச்சட்ட மூலத்தை ஆதரித்தோம் இச்சட்ட மூலத்தினை ஆதரித்ததன் மூலம் அரசாங்கத்தில் சேர்ந்து விட்டோம் என்றோ அல்லது உரிமைப் போராட்டங்களை கைவிட்டு விட்டோம் என்பதல்ல கருத்து. நல்லவற்றை ஆதரித்து எதிர்க்கவேண்டியதை எதிர்ப்பதே நமது கடமை. இந்த அடிப்படையில் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்துள்ளோம் எதிர்த்தும் வருகின்றோம்.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் பற்றி தென்னிலங்கையில் மாறுபட்ட கருத்துக்களை வகுப்புவாத தீவிரவாத சக்திகள் பரப்பிவருகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் கூட இச்சட்ட மூலம் நாட்டைப் பிரிக்க வழிகோலும் எனக் கூறியுள்ளனர். இந்த நிலைமையினை உணர்ந்து தமிழ் பேசும் மக்கள் உரிமைப்போராட்டத்தை தொடர்ந்து நடாத்த ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும்."

உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் தமதுரையில் கூறியதாவது மனித உரிமைகள் தினத்தினைக் கொண்டாடுவோர் சமுதாய விடுதலைக்காக போராடுபவர்கள் சமூக விடுதலை பற்றி சிந்தியாமை வேதனைக்கும் சிந்தனைக்கும் உரியதாகும். விடுதலைக்காகப் போராடும் சமுதாயமொன்று சமூக விடுதலைபற்றி சிந்திக்க வேண்டியது அவசியமென அமரர் வன்னியசிங்கம் எடுத்துரைத்தார். மேடைகள் போட்டு கூச்சல் போடுவதனால் பயனில்லை. செயலில் செய்து காட்ட வேண்டும்.



இதனை வன்னியசிங்கம் நடைமுறைக்கு கொண்டுவந்தார்.

த. வி. கூட்டணி ஆவரங்கால் மாநாட்டில் தீண்டாமை ஒழிப்பிற்கு காலக்கெடு விதித்து தீர்மானம் நிறைவேற்றியது இன்றுவரை அத்தீர்மானம் எந்தவடிவில் செயல்பட்டது என்பதனை யாரும் அறிவார்களா? சாதி சமூகப் பிரச்னைகள் வாக்குகளைப் பெற பயன்படுத்தப்பட்டதனால் சமூகப் பிரச்னைகள் முக்கியமாகபடவில்லை. தமிழரின் விடுதலையினை வேண்டுவோர் இதனை நன்குணர்ந்து சமூகப் பிரச்னைக்கு முக்கியமளித்து எமக்குள் பங்கம் விளைவிக்கக் கூடிய இப்பிரச்னையை ஒழித்துக்கட்ட 77-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் காட்டிய ஒற்றுமையை மீண்டும் காட்டிட வேண்டும்.

மற்றும் யாழ்ப்பாண எம். பி. வெ. யோகேஸ்வரன், காவலூர் எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம், காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள். (க)

## யாழ். மருத்துவபீடத்திற்கு நன்கொடைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடம் ஆரம்பமாகி இரண்டு ஆண்டுகளுக்குள் பல நன்கொடைகளைப் பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி எஸ். நடராஜா காலஞ்சென்ற தனது கணவன் டாக்டர் வி. நடராஜா ஞாபகார்த்தமாக இரு பரிசுகளை வழங்க இருபதினாயிரம் ரூபாவை கொடுத்துள்ளார். இதன் வைப்பு மூலம் கிடைக்கும் வட்டிப்பணத்திலிருந்து சமுதாய மருத்துவத்திற்கும் இறுதி எம். பி. பி. எஸ். திறமைபெறுபேற்றிற்கும் பரிசுகள் வழங்கப்படும்.

கொழும்பு இந்து கல்விச் சங்கம் மூலம் மகாராஜா நம்பிக்கை நிதி பன்னிரெண்டாயிரம் ரூபாய்களை இரண்டாவது எம்.பி.பி எஸ் திறமைப்பெறு பேற்றை பெறும் மாணவனுக்கு சுப்பிரமணியம் மகாதேவா புலமைப் பரிசிலை வழங்குமாறு கொடுத்துள்ளது. இதே மகாராஜா நம்பிக்கை நிதி மேலும் இதே அளவு பணத்தை மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்கப்படும் சிறந்த மாணவனுக்கு சின்னத்தம்பி இராஜேந்திரம் புலமைப் பரிசிலை வழங்க கொடுத்துள்ளது.

துரிதமாக வளர்ந்து வரும் மருத்துவ பீடம் மேலும் பல நன்கொடைகளை மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெற்றோர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி கணேச வித்தியாசாலை பெற்றோர் தினவிழாவும் பரிசளிப்புவிழாவும் நாளை மாலை பாடசாலைஅதிபர் திருவே. தம்பையாதலைமையில் நடைபெறுகிறது.

எதிர்க்கட்சித்தலைவர்திரு.அ அமிர்தலிங்கமும் பாரியாரும் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்ளும் இவ் வைபவத்தில் வட்டுக்கோட்டை எம்.பி. திருதா. திருநாவுக்கரசுவும் பாரியாரும் சிறப்பு விருதினராகக் கலந்து கொள்கிறார்கள். திருமதி.கலைமகள் திருநாவுக்கரசு பரிசில்வழங்குவார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (இ)

## மக்கள் கருத்து

### கைதடி மக்கள் கஷ்டம்

கைதடி உபதபாற் கந்தோர் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 13 ந் திகதி தரமுயர்த்தப்பட்டு, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. உக்குபண்டா விஜயக்கோனால் திறந்துவைக்கப்பட்டு, தபாற்கந்தோராக இயங்கிவருகின்றது. இருப்பினும் வெளிமாவட்டங்களில் உள்ள தபாற்கந்தோர்களினாலும்சரி, தேசிய சேமிப்பு வங்கியினாலும்சரி உபதபாற்கந்தோராகவே மதிக்கப்படுகின்றது. இதனால் 400 ரூபாவுக்கு மேற்பட்ட காசுக்கட்டளையை வெளிமாவட்டங்களில் உள்ளவர்கள் அனுப்ப முடியாதுள்ளது. அதேபோல் தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியில் பணம் வைத்திருப்பவர்கள் தாம் விரும்பும் தொகையைப் பெறுவதற்கான அனுமதி கோரி தேசிய சேமிப்பு வங்கிக்கு விண்ணப்பிக்குமிடத்து அத்தொகையைப் பெறுவதற்கான அனுமதியைத் தேசிய சேமிப்பு வங்கி கைதடி தபாற்கந்தோருக்கு வழங்காது சாவகச்சேரி தபாற்கந்தோருக்கே வழங்குகின்றது. எனவே தபாற்கந்தோராகத் தரமுயர்த்தப்பட்டும், அதனால் பெற வேண்டிய நன்மையைப் பெற முடியாது மக்கள் சிரமப்படுகின்றனர். கைதடி உபதபாற் கந்தோர் தரமுயர்த்தப்பட்டு 7 மாதங்களாகியும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருப்பது கவலைக்குரியதாகும். இனிமேலாவது இத்தகைய சிரமங்களைப் பொது மக்கள் அடையாது இருப்பதற்கும் தபாற்கந்தோராக இயங்குவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை உரியவர்கள் எடுப்பார்களா?

நா. சத்தியநாதன்

உரும்பராயில் உற்சவம்

## கருணாகரன் திருப்புகழ்

கருணா கரனென் ஒருநாமம்—எந்தைக்
கடவுளுக் கிட்ட திருநாமம்;
அருளே யுருவாம் பெருமானுக்(கு)—இந்த
அகிலம் வழங்கி வருநாமம்—(கருணா)

உரும்பராய் மேற்கில் ஒருமூர்த்தி—நம்மில்
உறுமிடர் போக்கி யருள்மூர்த்தி;
விரும்பிய யாவுந் தருமூர்த்தி சித்தி
விநாயகக் கோலத் திருமூர்த்தி—(கருணா)

கருணா நிதியாங் கணநாதன்—தொண்டர்
களிக்க நெஞ்சுட் புணர்நாதன்;
குருமா மணியாய் உணர்வேதன்—என்றுங்
கொடுக்கும் வரத குணபோதன்—(கருணா)

--சாரதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொழில் பாதுகாப்பும் சுகாதார நலனும், கடன் வசதிகள், வரிவிலக்கு, கைத்தொழில் பேட்டை முதலான விஷயங்களை உள்ளடக்கிய கருத்தரங்கொன்று இன்றும், நாளையும் யாழ் அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகிறது இதனையொட்டி இக் கட்டுரை வெளியாகிறது.)

# தொழிற்சாலைகளில் பாதுகாப்பு

**— வி. கே. வாமதேவா —**
(பொறியியலாளர்)

## தொழிற்சாலைகளிற் பாதுகாப்பு

இலங்கை தற்பொழுது அபிவிருத்தியில் மிகவும் விரைவாக முன்னேறிக்கொண்டு வருவதன் காரணமாக, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய இயந்திரங்களின் பாகங்களையும், நச்சுத்தன்மையுள்ளதாகவும் அல்லது எரியக்கூடியதாகவும் அல்லது வெடிக்கக் கூடியதாகவும் அல்லது உபத்திரவம் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கும் தூசி, வாயு, புகை, ஆவி ஆகியவற்றால் வரும் சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய சூழ்நிலைகளையும் தவிர்த்து அவர்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் உணரப்படுகிறது. தொழிற்சாலைகளில் தொழில் புரியும் தொழிலாளர்களை இவ்வாபத்துக்களிலிருந்து பாதுகாப்பது தொழில் கொடுப்போருக்கு உரிய இன்றியமையாத கடமையாகிறது. தொழிற்சாலைகளில் தொழில் செய்வோருக்கு பாதுகாப்பும் சிறந்த சுகாதார சூழ்நிலைகளும் வழங்கப்படவேண்டுமானால் மேலே குறிப்பிட்ட இடையூறுகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகும். இதை நோக்கிற் கொண்டு தொழில் கொடுப்போர் கையாளவேண்டிய விதிமுறைகள் இதன்கீழ் கொடுக்கப்படுகின்றது.

## தொழிற்சாலையைப் பதிவுசெய்தல்

1. எவரேனுமொருவர் ஏதேனும் இடத்தில் தொழிற்சாலைக் கட்டிடமொன்றினைக் கட்டும்பொழுது அல்லது ஏதேனும் தொழிற்சாலைக் கட்டிடத்திற்கு எவையேனும் விசாலிப்புகள் செய்யும்பொழுது அல்லது வேறுஏதேனும் கட்டிடத்தைத் தொழிற்சாலைக்கட்டிடமொன்றாக மாற்றஞ்செய்யும்போது அல்லது புதிதாக இயந்திரங்களைத் தொழிற்சாலையில் அமைக்கும்போது, முதன்மைத் தொழிற்சாலை எந்திரி அல்லது மாவட்டத் தொழிற்சாலைப் பரிசோதனை எந்திரியிடமிருந்து ஆலோசனை பெறுவதால், தொழிற்சாலையைத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பானதாகவும் பொருட்களைச் சிக்கனமானதாகவும் பயனுள்ளதாகவும் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

2. ஒரு தொழிற்சாலையை அமைக்கும்போது, தொழிலாளர்களுக்கு இடையூறு விளைக்கக்கூடிய அல்லது தனியான ஆபத்து ஏற்படுத்தக் கூடிய பகுதிகள் வேறாக அமைக்கப்படுதல் வேண்டும். அவையாவன.

(அ) வெடிக்கக்கூடிய அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய தூசி, வாயு, ஆவி அல்லது பொருட்களை உபயோகிக்கும், உற்பத்திசெய்யும் அல்லது சேமித்து வைத்திருக்கும் இடங்கள்.

(ஆ) தூசி, ஆவி, அல்லது நஞ்சினால் ஏற்படக்கூடிய இடையூறுகள் உள்ள இடங்கள்.

(இ) கடுமையான வெப்பமுள்ள இடங்கள்.

(ஈ) சத்தமுள்ள இடங்கள்.

(உ) கதிர்வீச்சினால் ஆபத்துள்ள இடங்கள்.

3. எவையேனும் வளவுகளைத் தொழிற்சாலையொன்றாக இருப்பாட்சி செய்ய அல்லது பயன்படுத்தத்தொடங்கக் கருதியுள்ள திகதிக்குக் குறைந்தது ஒரு மாதகாலத்திற்கு முன்னதாகவே முதன்மைத் தொழிற்சாலைப் பரிசோதனை எந்திரி அல்லது மாவட்டத்தொழிற்சாலைப் பரிசோதனை எந்திரிக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

## சுகாதாரம்

1. தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்திருக்கும் ஆட்களினது சுகாதாரத்திற்குத் தீங்கு ஏற்படக்கூடிய விதமாக அத்தொழிற்சாலையில் தொழில் நடக்கும்போது சனம் நெருக்கமாகவிருத்தலாகாது. பொதுவாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் 400 ச.அடி வீதம் இடவசதி அளித்தல் வேண்டும்.

2. ஏதாயினும் தொழில் அல்லது வேலை நடந்துகொண்டிருக்கும்போது உண்டாகக் கூடியனவும் சுகாதாரத்திற்குக் கெடுதியானவையுமான எல்லாப்புகைகளையும் தூசிகளையும் ஏனைய அழுக்குகளையும் தீங்கற்றவையாகச் செய்வதற்கு ஒவ்வொரு வேலையறையுள்ளும் போதிய சுத்தமான காற்றோட்டத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

3. ஆட்கள் வேலைசெய்யும் அல்லது போய்வரும் ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு பாகத்திலும் இயற்கையானதாயினும் சரி அல்லது செயற்கையானதாயினும் சரி போதியதும் ஏற்றதுமான வெளிச்ச வசதியைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

4. நிலத்தை ஈரப்படுத்தும் ஏதாயினுமொரு தொழில் நடத்தப்படுமிடத்து அந்த ஈரத்தை உலர்த்துவதற்காகிய வழிவகைகள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

5. தொழிற்சாலையில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் ஆட்களுக்குப் போதியதும் ஏற்றதுமான சுகாதாரவசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவை சுத்தமாக வைத்திருக்கப்படவேண்டும். அவற்றுக்கு வெளிச்ச வசதிகள் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆண்களும் பெண்களும் வேலைக்கமர்ந்திருக்குமிடத்து சுகாதார வசதிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் முறையாக புறம்பான (தனித்தனி) அளிக்கப்படுதல் வேண்டும்.

## பாதுகாப்பு

1. தொழிற்சாலையிலுள்ள பிரதான இயக்கியினது இயங்கும் பாகமொவ்வொன்றும் உறுதியான வேலியாற் காக்கப்படுதல் வேண்டும்.

2. அனுப்பும் இயந்திரசாதனத்தினது ஒவ்வொரு அபாயகரமான பாகமும் வேலியாற் காக்கப்படுதல் வேண்டும்.

3. ஏனைய இயந்திரசாதனங்களினது ஒவ்வொரு அபாயகரமான பாகமும் வேலியாற் காக்கப்படுதல் வேண்டும். ஆயினும் ஏதாயினுமொரு இயந்திரசாதனத்தினது அபாயகரமான பகுதி இடையூறு செய்யாதிருக்குமாறு நிலையான காவலின் மூலம் தடுக்க முடியாத நிலையில் அபாயத்துடன் அதை இயக்குவோன் முட்டுதலைத் தானாகவே தடைசெய்யும் ஒரு வழிவகையை ஏற்படுத்தல் வேண்டும்.

4. அபாயகரமான இயந்திரங்களில் வேலைசெய்யும் பராயமற்றோருக்கு அந்த இயந்திரத்தில் போதிய பயிற்சியளிக்கப்பட வேண்டும். அல்லது அந்த இயந்திரத்தைப் பற்றிய திட்டமான அறிவும் பயிற்சியுமுள்ள ஒருவரின் மேற்பார்வையின் கீழ் வேலை செய்ய வேண்டும்.

5. உயர்த்தும் கருவிகளும் ஏற்றுங்கருவிகளும் நல்ல அமைப்புடையதாகவும் உரமான பொருள்களாலானதும் போதிய பலமுடையதாகவும் பழுதில்லாததாகவும் இருத்தல் வேண்டும். இவை ஒவ்வொரு ஆறு மாத காலத்திலும் ஒருமுறையாவது தகுதியுள்ள ஒருவரினால் சரிவரப் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும்.

6. ஒவ்வொரு நீராவிக் கொதிகலத்தினது ஒவ்வொரு பாகமும், நன்றாக அமைக்கப்பட்டதாகவும், பலமான பொருளாலானதாகவும், போதிய பலமுள்ளதாகவும், பழுதுகள் இல்லாததாகவும் இருத்தல் வேண்டும்.

(7) ஒவ்வொரு நீராவிக் கொதிகலமும் அதன் எல்லா உறுப்புகளும் இணைப்புகளுடன் முறையான நிலையில் வைத்திருக்கப்படல்வேண்டும்.

(8) ஒவ்வொரு நீராவிக் கொதிகலமும் அதன் எல்லா உறுப்புக்களும் இணைப்புகளும் பதிவாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் பன்னிரண்டு மாதங்களுக்கொரு முறையாவது, பெரியஅளவில் ஏதாவது பழுது பார்த்த பின்னரும் முன்னரும் பரிசோதனை செய்யப்படுதல் வேண்டும்.

(9) ஒவ்வொரு காற்றுவாங்கியும் (ஏற்று கொள் கலம்( அதன் உபகரணங்களும் உறுதியாக அமைக்கப்பட்டு, நல்ல முறையில் பேணப்படுதல் வேண்டும்.

(10) வளிவாங்கி ஒவ்வொன்றும் பதிவாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் ஆகக்குறைந்தது இருபத்திநான்கு மாதங்களுக்கொரு முறை செம்மையாகச் சுத்தமாக்கப்பட்டு, பரிசோதிக்கப்படல் வேண்டும்.

(11) தொழிற்சாலையில் நெருப்புப் பிடிக்கும் சமயத்தில் அதனுள் வேலை செய்யும் தொழிலாளர்கள் தப்புவதற்குத் தேவைப்படக்கூடிய வழிவகைகள் தொழிற்சாலையில் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

## சேமநலம்:

1. வேலை செய்யும் எல்லா ஆட்களுக்கும் சுத்தமான குடிதண்ணீர் போதிய அளவில் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

2. போதியளவும் ஏற்றதுமான கழுவும் வசதிகள் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

3. வேலை செய்பவர்கள் (தொழிலாளர்) வேலை புரியும் நேரங்களில் அணியாத உடைகளை பாதுகாப்பாக வைப்பதற்கு இடவசதி வழங்கப்படுதல் வேண்டும்.

4. தொழிற்சாலை ஒவ்வொன்றிலும் இலகுவிற் கிடைக்கக் கூடியதாக, தொழிலாளர்களுக்கு முதலுதவிப் பெட்டிகள் வைக்கப்பேணப்படுதல் வேண்டும்.

5. ஒவ்வொரு முதலுதவிப் பெட்டியும் பொறுப்புள்ள ஒருவரின் மேற்பார்வையில் வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன், அவர் முதலுதவிப் பயிற்சியளிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

## விசேட ஏற்பாடுகள்

1. தொழிற்சாலையில் செய்யப்படும் தொழில்முறை சம்பந்தமாக உண்டாகும் தூசி அல்லது புகை, வேலை செய்பவர்களுக்குக் கெடுதியாயின், அவ்வேலை செய்பவர்கள் அத்தூசியை அல்லது புகையை உள்ளே சுவாசிக்கா வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டும்.

2. ஏதாயினுமொரு அறையில் ஆசனிக் அல்லது வேறு விஷப்பொருள் ஏதாயினும் தூசி அல்லது புகை எழுப்பக் கூடியதாகப் பாவிக்குமிடத்து, ஒருவர் அந்த அறையிலிருந்து உணவுஉண்ண அல்லதுபானம் பருக அனுமதிக்கப்படலாகாது.

3. தொழிற்சாலையில் ஏதேனும் செய்முறையில் அல்லது தொழிற்பாட்டில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள ஆட்களின் கண்களுக்கு அல்லது தொழிற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடங்களுக்கு அருகாமையில் வேலை செய்கின்ற ஆட்களின் கண்களுக்கு ஏதேனும் விபத்து நேரக்கூடியதாக இருக்குமிடத்து, அத்தகைய ஆட்களுக்குப் பொருத்தமான கண்பாதுகாப்பு ஏற்பாடுசெய்யப்படுதல்வேண்டும்.

4. தொழிற்சாலையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளி எவரும் போதுமான பாதுகாப்பு அணிகளைக்கொண்டிருந்தாலொழிய, விதிக்சப்பட்ட மேலெல்லையிலும் கூடுதலாகவுள்ள சத்தம் எதனையும் கேட்க இடமளித்தலாகாது.

5. தொழிற்சாலையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர் எவரும் கதிர்வீச்சுக்கு அல்லது அயன் ஆக்கக் கதிர்வீச்சுக்கு அல்லது ஊதாக்கலந்த நிறக்கதிர் வீச்சுக்கு அல்லது செந்நிறக்கதிர் வீச்சுக்கு அல்லது வேறு மின்சாரக் கதிர் வீச்சுக்கு உட்படுத்தப்படல் ஆகாது.

6. தொழிற்சாலையில்வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளரின் உயிருக்குச் சேதம் விளைவிக்கின்ற அல்லது மூன்றுநாட்களுக்கு அதிகமாக முழுச்சம்பளமும் பெறுவதில் இருந்து இயலாதாக்கின்ற ஏதேனும் விபத்துக்கள் நிகழ்கின்றவிடத்து, உரிமையாளர்கள் விபத்துப்பற்றிய எழுத்திலான அறிவித்தலை மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனை எந்திரி அவர்களுக்குஅறிவித்தல்வேண்டும்.

7. தொழிற்சாலையில் கைத்தொழில் சம்பந்தமாக ஏற்படும் வியாதிகள் பற்றி மாவட்டத் தொழிற்சாலைப் பரிசோதனை எந்திரி அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

8. பொது இடாப்பு என அழைக்கப்படும் ஒரு இடாப்பு பெருமளவில் விதிக்கப்பட்ட மாதிரியில் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

## தொழிற்சாலையில் தொழிலுக்கு அமர்ந்திருப்போர் கவனிக்கவேண்டியது

தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்திருக்கும் எவராவது ஒருவர் தொழிலாளிகளினது ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் அல்லது நன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள எந்த வழிவகையாவது, உபகரணங்களையாவது, வசதியையாவது அல்லது வேறு பொருளையாவது வேண்டுமென்று பிழையாக உபயோகித்தலாகாது.

தொழிலாளர் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வழிவகை அல்லது உபகரணத்தை உபயோகித்தல் வேண்டும்.

ஒரு தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்திருக்கும் எவராயினும் தமக்கு அல்லது பிறருக்குத் தீங்கை விளைவிக்கக்கூடிய எதையாவது வேண்டுமென்று போதிய காரணமின்றிச் செய்யலாகாது.

(இக் குறிப்புகள் தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டவை).

---

### முருகவேள் தனித்துவம் பாடிய தாயின்

## வெண்கல நாதமும் ஓய்ந்ததோ!

கன்னலோ! பாலோ! நற்கற்கண்டோ! — தேனுங்
கலந்ததோர் பேரின்ப ஊற்றதோ!
என்னென்றிசைப்பது இன்னிசை — இயல்
எத்தனை! எத்தனை! அத்தனை!
நன்னயமோர்ந்துமே பாடிய — இசை
ஞான முழக்கமும் ஓய்ந்ததோ!
சொன்னய ஏழிசை மூதாட்டி — எங்கள்
சுந்தரம்பாளோ! மறைந்தனள்!

தனித்தனி முக்கனிச் சாற்றினால் — இசைச்
சால்பையெடுத்து இதயத்தில்
இனிக்க இருத்திய இசைச்செல்வம் — அந்தோ
எங்ஙனம் ஓய்ந்ததோ! முருகவேள்
தனித்துவம் பாடிய தாயவள்! — தமிழ்த்
தாரகமந்திரமானவள்!
மனித்தப்பிறப்பிலோர் மாமணி — சைவ
மாண்பிசை பாடிய மாங்குயில்

வெண்கல நாதமும் ஓய்ந்ததோ! — இசை
வெட்டி முழக்கிடும் மேதையின்
விண்பரவின்னிசை ஓய்ந்ததோ! — உயர்
வீரமணிக்குரல் வீழ்ந்ததோ!
எண்ணரும் இன்னிசை ஏற்றமே — எங்கும்
எடுத்தெடுத்தேத்திய மாதவம்!
பண்களி கூர்ந்திடு பழநிவேல் — ஆண்டி
பாதமலர்கள் கலந்தாளோ!

--- வித்துவான் சி. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்ற இசைவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஒன்பதாவது ஆண்டு இசைவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி பத்துத்தினங்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது. நல்லூரிலுள்ள யாழ். திவ்வியஜீவன மண்டபத்தில் இவ்விசைவிழா நடைபெறும்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

மாலை 4-00—500 மங்கள இசை இணுவல், என். ஆர். சந்தானகிருஷ்ணன் குழுவினர், 5-00—5-20 பாட்டு செல்விகள் எஸ். குமுதினி, எஸ். உதயனி, எம். நிரஞ்சனி, எஸ். சசிகலா, எம். குமுதினி, வயலின்: செல்வன் பாக்கியராஜா கண்ணன், மிருதங்கம்: திரு. எஸ். மகேந்திரன், வீணை: 5-20 — 5-40 செல்விகள் கல்யாணி பாலசிங்கம், ஜெகந்தா ஜெகதீசன், மிருதங்கம்: செல்வன் ப. கிருபாகரன், 5-40—6-00 செல்வி சத்தியகலா திருநாவுக்கரசு பாட்டு, செல்வி பாக்கியலக்ஷ்மி நடராசா வயலின், திரு. எம். சிதம்பரநாதன் மிருதங்கம், 6-00—6-10 இ. க. ம. மியூஸிக் அகடமி மாணவன்: செல்வன் ஐ. ஜெயபாலன், செல்வன் வி. மனோஹரன், செல்வன் இ. முருகதாஸ், செல்வன் நா. கேதீசன் தாளவாத்தியம், 6-10—6-40 செல்வி சந்திராதேவி வேலுப்பிள்ளை வீணை, திரு. எஸ். கே. கணேசலிங்கம் மிருதங்கம், 5-40 — 7-15 செல்வி வனசோதி ஆறுமுகம் பாட்டு, ப்ரம்மஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வரசர்மா வயலின், திரு. மகேந்திரன் மிருதங்கம், 7-15— 7-50 ஆசியுரை ஸ்ரீ ஸ்ரீ சுவாமிநாத பரமாச்சார்ய சுவாமிகள், 7-30—7-40 தலைமையுரை: திரு. கே. சி. லோகேஸ்வரன் (பதிவாளர், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), 7-40—8-00 செல்வி தர்மவதி விஸ்வநாதன் வீணை, திரு. எஸ். மகேந்திரன் மிருதங்கம், 8-00—8-20 செல்வன் இ. ஜெயராஜ், செல்வன் க. வசந்தன், செல்வன் கு. இரத்தினகுமார், செல்வன் க. குமாரதாசன் பாட்டு, திரு. வி. கே. குமாரசாமி வயலின், திரு. எம். சிதம்பரநாதன் மிருதங்கம், 8-20—9-20 திரு. எஸ். குமாரசாமி பாட்டு, ப்ரம்மஸ்ரீ எஸ். வெங்கடேஸ்வரசர்மா வயலின். திரு. எஸ். கணேசலிங்கம் மிருதங்கம், 9-20—10-20 பரதநாட்டியம்: 'நாட்டியஜோதி' நளாயினி இராசதுரை அவர்களின் மாணவிகள் செல்விகள் உமா சிவசுப்பிரமணியம், எஸ். வாசுகி, எஸ். சுகுணா, பி. சாந்தினி, செல்வன் பி. முகுந்தன்.

# உற்சவாரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோவில் போரதீவு ஸ்ரீ சித்திரவேலாயுத சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. காரைநகர் கிரியாகலாபமணி சாம்பசிவ சோம சபேசக் குருக்கள் கிரியைகளை நடாத்தி வைத்தார். (அ)

# நீரிறைக்கும் இயந்திரப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நீர் இறைக்கும் இயந்திரம் பராமரித்தலும் பழுதுபார்த்தலும்சம்பந்மானஇலவசபயிற்சிவகுப்பொன்று இன்று காலை பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏயில் நடைபெறும்.

"சிக்மா பம்ப்" நிறுவனத்தைச் சேர்ந்த பொறியியலாளர்கள் இப் பயிற்சி வகுப்பில் விளக்கவுரையாற்றுவார்கள். (வெ)

# கமநலச்சேவை மத்திய நிலையம்

(நெல்லியடி)

கமநலச்சேவைகள் மத்திய நிலையமொன்று நீர்வேலியில் நிறுவப்படவுள்ளது. இந்நிலயத்தினை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை கமநலச்சேவை ஆணையாளர் திரு. ஜீ. ஜீ. விக்கிரமசிங்கா மேற்கொண்டுள்ளார்.

புத்தளம் மாவட்டத்திலுள்ள மகாவேவ என்றஇடத்திலும், பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த மஸ்பன்ன என்ற இடங்களிலும் கமநலச்சேவைகள் மத்திய நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

# "தமிழர் தங்களை ஆளும் காலம் நெருங்கிவருகிறது"

## வவனியா எம். பி. உரை

(புளியங்குளம்)

"பல்கலைக்கழக அனுமதிக்கு அரசினரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கான மாவட்ட அடிப்படையிலான கோட்டாவைக் கூடப் பெற முடியாத நிலையில் வவனியா மாவட்ட உயர்கல்வி அமைப்பு இருப்பதையிட்டுக் கவலையடைகின்றேன். இந்நிலைமையைப் போக்குவதற்கு ஆசிரியர்கள் முன்வரவேண்டும்."

மன்னகுளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் புளியங்குளம்வட்டாரக் கல்வி அதிகாரி திரு. செ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய வவனியாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

"தமிழ் பேசும் மக்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள், தாம் அப்பகுதி மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் தொண்டாற்றுவதாக எண்ண வேண்டும். வெறுமனே கடமைக்காகப் போதிப்பதை விடுத்து அவ்வப்பகுதி கிராம மக்கள் கல்வியிலும் சரி, ஏனைய துறைகளிலும் சரி துரித அபிவிருத்தியடைய தம்மாலான சேவையைச் செய்ய வேண்டும்"

"தமிழ்பேசும் மக்கள் தங்களை தாங்கள்ஆளும்காலம் மிக நெருங்கி வருகின்றது. அவ்வாறு ஆளும் தகுதி பெறுபவர்கள் ஏனைய சமூகத்தவர்களை விட கல்வி கேள்விகளில் மேம்பட்டு விளங்க வேண்டும். கல்வி அறிவு பெறுவதன் மூலமே இன்றைய எமது சகல அரசியல் பிரச்னைகளையும் நுணுகி ஆராய்ந்து தீர்க்கமான முடிவுகளைப் பின்பற்ற முடியும்.

ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்தி சிறந்த பிரஜைகளாக்குவதுபோல தலைவர்கள் தொண்டர்களை வழிப்படுத்தி சிறந்த அரசியலறிஞர்களாக்க முடியும் என்பது ஆணித்தரமான கருத்தாகும்."

அடுத்து வவனியா மாவட்ட கல்வி அதிகாரி திரு. வே. கந்தசாமி கூறியதாவது:

"எமது கல்வி அமைச்சின் கொள்கைக்கிணங்க இப்பாடசாலையிலுள்ள சகல மாணவர்களும் இன்றைய மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொண்டார்கள். அனைவரும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி பரிசில்களைப் பெற்றுள்ளனர். இவ்வாறு போட்டிகளை நடாத்துவதற்குத் தொகையான மாணவர்கள் வேண்டும் என்பதில்லை. இச் சிறு பாடசாலையில் சிறு தொகையான மாணவர்கள் இருந்தபோதிலும் சிறப்பாக ஒழுங்கு செய்தமைக்காக பாடசாலை அதிபரைப் பாராட்டுகின்றேன். மேலும் இன்று புளியங்குளம் கல்வி வட்டாரத்தில் கல்வி பயிலும் புற முயற்சிகளிலும் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகின்றதை எம்மால் அவதானிக்க முடிகிறது. அத்துடன் வவனியா மாவட்டத்திலுள்ள புளியங்குளம் வட்டாரத்திலேயே இம்முறை அதிகமான சிறு பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகளையும் கலை விழாக்களையும் நடாத்தியுள்ளது."

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வி. குமாரசிங்கம், மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸ், பாடசாலை அதிபர் திரு. பா. இரகுநாதன் ஆகியோரும் பேசினார்கள். (க)

# "மரங்களைப் பாதுகாப்பதில் மக்கள் ஆதரவு தாருங்கள்"

(யாழ்ப்பாணம்)

"யாழ். நகரை அழகு படுத்தவும், கொடும் வெய்யிலிலிருந்து மக்களுக்களுக்கு ஆறுதலளிக்கவும், வீதியோரங்களில், நிழல்தரும் மரங்களை நாட்டும் இயக்கத்திற்கு பொதுமக்கள் ஆதரவு வழங்க வேண்டும்."

யாழ். றோட்டறிக் கழகச் செயலாளர் டாக்டர் எஸ். எஸ். சேனுதிராசா மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

டாக்டர் சேனுதிராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும், கூறியிருப்பதாவது:-

"மக்களின் நன்மை கருதி மரம் நடும் இயக்கம் 1976-ம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ். நகரில் பல இடங்களில் நாட்டப்பட்ட மரங்கள் இன்று பெருமரங்களாக வளர்ந்து நகருக்கு அழகையும், மக்களுக்கு நிழலையும் வழங்குகின்றன.

"யாழ். திறந்தவெளி அரங்கிற்கு அருகில் உள்ளவீதியில் நாட்டப்பட்ட மரங்கள் இன்று பெரிதாக வளர்ந்துள்ளன. ஆனல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திற்கு அருகில் உள்ள வீதியில் கடந்த மாதம் நாட்டப்பட்ட சிறு மரங்களின் பாதுகாப்புக்காகக் கட்டப்பட்ட சிமெந்துச் சுவர்கள், உடைத்து தரைமட்டமாக்கப்பட்ட நிலையில் காணப்படுவது பெரும் வேதனையளிக்கிறது. 2 இலுப்பை, 2 வேம்பு, ஒரு மலைவேம்பு ஆகிய மரங்களை பாதுகாக்கவே இச் சுவர்கள் கட்டப்பட்டன. இப்படியான நிலைமைகள் இனி மேல் நடைபெருது இருக்க, பொதுமக்களின் பூரணஒத்துழைப்பை வேண்டுகிறோம்." (க-அ)

# இன்ஸ்பெக்டருக்கும் கான்ஸ்டபிளுக்கும் கட்டளை!

(மாவிட்டபுரம்)

சந்தேகநபர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டதாகவும், தாக்கிக் காயம் விளைவித்ததாகவும் முன்னுள் சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீதும், கான்ஸ்டபிள் ஒருவர் மீதும் தொடரப்பட்ட வழக்கின் பிரதியை சட்டமா அதிபரிடமிருந்து கோருவதென தெரிவித்த் மல்லாகம் நீதிபதி மேற்படி பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கும், கான்ஸ்டபிளுக்கும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளை பிறப்பித்தார்.

அளவெட்டியைச் சேர்ந்த சந்தேக நபரான சரவணமுத்து சற்குணசிங்கம் என்பவரைக் கைது செய்த சங்கானைப் பொலிஸ்நிலைய முன்னுள் இன்ஸ்பெக்டர் மிஸ்கின், கான்ஸ்டபிள் ஸ்ரீவன் ஆகியோர் சந்தேக நபருக்கு துப்பாக்கியால் சுட்டுக் காயம் விளைவித்ததாகவும், தாக்கிக் காயம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்தால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் இவ்வழக்கின் பிரதி ஏற்கனவே சட்டமாஅதிபரது கோரிக்கைக்கிணங்க அவருக்கு அனுப்பப்பட்டதாகவும், பின்னர் அவரிடமிருந்து பெறப்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்குப் [illegible] பிரதி இன்றி இவ்வழக்கின் விசாரணையை ஆரம்பிக்க முடியாமலிருப்பதால் வழக்கின் பிரதிகளை சட்டமா அதிபரிடமிருந்து கோருவதுடன் எதிரிகளான இன்ஸ்பெக்டருக்கும் கான்ஸ்டபிளுக்கும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டு கொண்டார்.

நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் இல்வழக்கின் பிரதிகளை சட்டமா அதிபரிடமிருந்து கோருவதாக தெரிவித்து எதிரிகள் இருவருக்கும் களுத்துறை பொலிஸ் அதிபருக்கூடாக கட்டளை அனுப்புமாறும் உத்தரவிட்டார்.

சங்கானைப் பொலிசாரால் மேற்படி சந்தேகநபர் சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கும், அன்றையதினம் விசாரணைக்கெடுக்கப் பட்ட போது மேற்படி துப்பாக்கி பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டதாகவும், பரிசோதனை குறித்த அறிக்கை இன்னமும் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

அவ்வறிக்கையை கோருமாறும் நீதிபதி உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

மேற்படி சந்தேகநபர் வடபகுதி வன்செயல்கள் தொடர்பாகக் கைதாகி 10க்கு மேற்பட்ட வன்செயல்கள் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாளஅணிவகுப்புக்குட்படுத்தப்பட்டபோது அவ [illegible] பட்டதால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். [illegible]

# அனுதாபியின் சைக்கிளும் அபேஸ்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புச் சந்தையடிப்பகுதியில் ஒரே தினத்தில் இரு சைக்கிள் வண்டிகள் களவு போயுள்ளன.

ஒருவரின் சைக்கிள் களவு போனதைக் கேள்விப்பட்டு அதுபற்றி நேரில் விசாரித்து அனுதாபம் தெரிவிக்க மற்றொருவர் தமது சைக்கிளை ஓரிடத்தில் நிறுத்தி வைத்துவிட்டு போனாராம். அவர் திரும்பி வந்து பார்த்தபோது தமது சைக்கிளும் களவாடப்பட்டிருப்பதைக் கண்டு அவர் அதிர்ச்சி அடைந்தார். இத்திருட்டுக்கள் பற்றி சங்கானைப்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

# மரண விசாரணை பற்றி ஒரு சுற்றறிக்கை

(பண்டத்தரிப்பு)

அரசினர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் 24 மணித்தியாலத்திற்குள் இறந்தால் அவரது மரணம்பற்றி மரண விசாரணை நடாத்தப்படவேண்டும் என்ற விதி தளர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வைத்தியசாலையில் ஒரு நோயாளி அனுமதிக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள் மரணம் அடைந்தால் அந்த மரணம்பற்றி மரண விசாரணை நடாத்தப்பட்ட பின்பே பிரேதம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வந்தது. இது சம்பந்தமாக கடந்தவாரம் கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஏச். ஏ. ஜேசுதாசன் புதியதொரு சுற்றறிக்கை ஒன்றை சகல வைத்தியசாலைகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இப்புதிய சுற்றுஅறிக்கையின் பிரகாரம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள் மரணமடைந்த நோயாளிகள் சகலருக்கும் மரண விசாரணை நடாத்தப்படவேண்டிய அவசியம் இல்லை என்றும், மரண விசாரணை அவசியம் நடாத்தப்படவேண்டும் என்று வைத்தியசாலை டாக்டர் கருதும்பட்சத்தில் தான் இவ்வாறான விசாரணை நடாத்தப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மதுஒழிப்பு இயக்கம்

(மன்னர்)

முதன் முதலாக மது ஒழிப்பு இயக்கம் உயிலங்குளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திரு. எஸ். எம். கறுப்பையா ஆச்சாரியார் இவ்வியக்கத்தை ஆரம்பித்துவைத்தார்.

# கைத்தொழில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். இரசேந்திரன் (தொழில் திணைக்கள தொழிற்சாலைப் பிரிவு, சௌக்கிய அதிபர்) 4-00 சிறிய நடுத்தர தொழிற்சாலைகளுக்கான கடன்வசதி- வி. இராஜேந்திரன் (மக்கள் வங்கி பிராந்திய உதவி முகாமையாளர்)

நாளைய நிகழ்ச்சிகள்:-

9-00—10-00 தொழிற்சாலை விபத்துக்களை தடுத்தல் வி. கே. வாமதேவன் (பிரதம பொறியியலாளர் பகுதி), 10-00—11-30 சிறிய நடுத்தர தொழிற்சாலைகளுக்கு கடன் வசதி - எம். கனகரத்தினம் (பிராந்திய முகாமையாளர் இலங்கை வங்கி) 11-30-12-45 கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சிறிய தொழிற்சாலைகள்- திரு. அன்ரன் பொணுண்டோ, (பிராந்திய அதிபர் - கைத்தொழில் அபிவிருத்திச்சபை) மதியபோசனம் எஸ். சின்னத்துரை அன் பிரதர், 1-45 3-00 மின்வியல் விபத்துக்களுக்கான பரிகாரம் - எஸ். சிவபாஸ்கரன் (பதில் ஆணையாளர் தொழில் திணைக்களம்) 3-00 4-15 சிறிய பெரிய கைத்தொழிலாளர்களுக்கான சந்தை வாய்ப்பு— ஏ. ஜே. ஜி. அபயசிங்க (அதிபர் சந்தைப்படுத்தும் பகுதி - கைத்தொழில் அபிவிருத்தி சபை) 4-15 —5-15 படக்காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஈரான் -- ஈராக் யுத்தத்தின் எதிரொலி

# ஈராக்கிலிருந்து வெளிநாட்டவர் பெருமளவில் வெளியேற்றம்!

## ஆயிரக்கணக்கில் அகதிகள்!!

லண்டன், செப்- 25

ஈரானின் விமானப்படைத் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக தெற்கு ..ராக்கிலிருந்து வெளியேறும் பெருந்தொகையான வெளிநாட்டவர்களுடன் ரஷ்யர்களும் சேர்ந்து வெளியேறுகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 500 ரஷ்யர்கள் நேற்று குவைத்பிரதேசத்தைக் கடந்து சென்றுர்களென்று நேரில் கண்ட ஒருவர் கூறினுர்.

குவைத்திலுள்ள எண்ணைக் காவல் நிலையமொன்றில் நேற்றிரவு சுமார் 3,000 அகதிகள் கூடினுர்களென்றும், இவர்களில் அநேகமானேர் கிழக்கு ஐரோப்பியர்கள், ஆசியர்கள் என்றும்கூறப்படுகிறது.

ஈராக்கிலுள்ள 'ருமெய்லா' என்ற எண்ணெய்வளப் பிரதேசத்தில் ரஷ்யர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்களென நம்பப்படுகிறது.

இதே வேளையில் ஈரான்—ஈராக் எல்லையில் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யும்படி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் ஈரான், ஈராக் நாடுகளின் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையும் ஈரான்—ஈராக் நாடுகளை யுத்த நிறுத்தம் செய்யும்படி கேட்டிருந்தது தெரிந்ததே. (வெ)

## மத்தியதரைக்கடலில் பிரான்ஸ் கடற்படை

### பிரெஞ்சுகடற்படைஅதிகாரிகள்தகவல்

பாரிஸ், செப். 25

மத்திய தரைக்கடலில் பிரான்ஸ் பலம்வாய்ந்த கடற்படையை நிறுத்திவைத்துள்ளதென்றும், மேற்குநாடுகளுக்கு சாதகமாகவே இந்நடவடிக்கையை பிரான்ஸ் மேற்கொண்டுள்ளதாகவும்அந்நாட்டின் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்,

இப்பிரதேசத்தில் 55 பலம் வாய்ந்த கடற்படைகள், அணுசக்தியினுல் இயங்கும் நவீன முறையிலான சில யுத்தக்கப்பல்களும் நிலைகொண்டுள்ளன என்று கூறப்படுகிறது.

சோவியத் யூனியனின் 23 போர்க்கப்பல்களையும், அமெரிக்காவின் 60 போர்க்கப்பல்களையும் அடுத்து மூன்ருவது இடத்தை மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் பிரான்ஸ் கடற்படை வகிக்கிறது.

அணுசக்தி ஏவாயுதங்கள் பொருத்தப்பட்ட மிகஉயர்ந்த தரத்தையுடைய சுமார் 33,000 தொன் நிறைகொண்டிருக்கும் விமானம் தாங்கிக் கப்பலான "கெமன்சோ"வும் இக்கடற்படையில் அடங்கியுள்ளது. மேலும் மத்திய தரைக்கடலில் பிரான்சின் ஐந்து அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளன. (வெ)

## கே. பி. சுந்தராம்பள் மாரடைப்பால் காலமானுர்!

சென்னை, செப். 25

புகழ்பெற்ற இசைக்கலைஞரும், நடிகையும், விடுதலை வீரருமான திருமதி கே. பி. சுந்தராம்பாள் நேற்று சென்னையில் மாரடைப்பினுல் காலமானுர் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்ருேம்.

இறக்கும் போது அவருக்கு வயது 72.

கே. பி. சுந்தராம்பாள் "பத்மபூஷண்" விருது பெற்றதுடன், தமிழ்நாடு அரசினுல் வழங்கப்பட்ட "கலைமணி" விருதையும் பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பல தமிழ் திரைப்படங்களில் பாடியும், நடித்துமுள்ளார். அவற்றில் "ஔவையார்", "திருவிளையாடல்" ஆகிய திரைப் படங்கள் இவருக்குப் பெரும்புகழீட்டியவையாகும்,

இவர் கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். (வெ)

## தாலிக்கொடி வழிப்பறி:

### சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்

(மாவிட்டபுரம்)

வீதியால் சென்ற பெண்ணின் தாலிக் கொடியைச் சைக்கிளில் வந்து அறுத்துச் சென்றது தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்ட சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார்.

மாவிட்டபுரம் அரசடியில் வீதியால் சென்றுகொண்டிருந்த மயிலிட்டியைச் சேர்ந்தவை. விஜயலட்சுமி என்ற பெண்ணின் 5000 ரூபா பெறுமதியான தாலிக்கொடியை சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச்சென்றிருந்தனர். சுன்னுகம் பொலிசாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்ட புன்னுலைக்கட்டுவனைச் சேர்ந்த வைத்தி பத்மநாதன் என்பவருக்கும் மேற்படி தாலிக்கொடி அபகரிப்புக்கும் தொடர்பிருக்கலாம் என்று கருதப்பட்டு இவர் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது அடையாள அணிவகுப்புக்கு உத்தரவிடப்பட்டது.

மல்லாகம் பதில்நீதிபதி திரு. ரி. தம்பிரத்தினம் முன் நடந்த அடையாள அணிவகுப்பில் மேற்படி பெண் இந்நபரை அடையாளம் காட்டினுர். இதனையடுத்து இவர் மீது வழக்குத் தொடருமாறு காங்கேசன்துறைப் பொலிசாரைப் பணித்த நீதிபதி அவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இத்தாலிக்கொடி அபகரிப்பில் இவருடன் ஈடுபட்ட மேலும் இருநபர்கள் பொலிசாரால் தேடப்பட்டுவருகிருர்கள்.

## இந்தியாவிற்கு அணுசக்தி' விற்பனை: அமெரிக்க செனட் அனுமதி!

வாஷிங்டன், செப். 25

அமெரிக்கா 38 தொன் அணுசக்தி எரிபொருளை இந்தியாவிற்கு விற்பனை செய்வதை அமெரிக்க செனட் சபை நேற்று அங்கீகரித்தது.

இதற்கு ஆதரவாக 48 வாக்குகளும், எதிராக 46 வாக்குகளும் கிடைத்தன. அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரின் வெளிநாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாக இது கருதப்படுகிறது.

அமெரிக்க பாராளுமன்றத்தில் இந்தியாவிற்கு அணுசக்தி எரிபொருளை வழங்குவதென்ற தீர்மானம் தோற்கடிக்கப்பட்டபின், அமெரிக்க செனட் சபையில் இந்தத்தீர்மானத்திற்கு எதிராக தீவிரபிரசாரம் மேற்கொள்ளப்பட்டது:

இந்தியாவிற்கு அணுசக்தி எரிபொருளை விற்பனை செய்வது தடுக்கப்பட்டால், இந்தியா சோவியத் யூனியனின் உதவியை நாடக்கூடுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் தேசியநலன் கருதியே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் ஜனுதிபதி கார்ட்டரின் ஆதரவாளர்கள் எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்களுக்கு அமெரிக்க செனட்சபையில் பதிலளிக்கையில் தெரிவித்தனர்.

வாஷிங்டனில் 1974ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு முரண்பாடாக, அமெரிக்கா வழங்கிய கடனுதவியைப் பயன்படுத்தி இந்தியா அணுசக்திப் பரிசோதனையை மேற்கொண்டது.

நாட்டின் தேசிய நலன் கருதி இத்தகை[illegible] பரிசோதனைக[illegible]திலும் இடம்பெறக்கூடுமென்பதை இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி மறுக்கவில்லை. (வெ)

## ரின்னுக்குள் வைத்த தாலிக்கொடி எங்கே?

(பண்டத்தரிப்பு)

ரின்ஒன்றில் போட்டுவைத்த ஏழுபவுண் நிறையுள்ள தாலிக்கொடியும் ஒருசோடி பவுண் தோடுகளும் சுழிபுரம் வடக்கிலுள்ள வீடொன்றில் இருந்து திருடப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் வடக்கிலுள்ள [illegible] மூர்த்தி என்பவரது வீட்டில் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியும், தோடுகளும் தகரரின் ஒன்றில் போட்டு மூடிவைக்கப்பட்டதாகவும், அதிகாலை நேரத்தில் வீட்டில் யாருமில்லாதபோது இந்த நகைகள் அடங்கியரின் மாயமாக மறைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

அன்று பிற்பகல் பக்கத்து வளவிலுள்ள பற்றைக்குள் நகைபோட்டுவைத்த வெற்றுரின் மட்டும் வீசப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி சங்கானைப்பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினுர்கள். (க)

## கரவெட்டி மீனவருக்கு சுண்டிக்குளத்தில் காணி

(நெல்லியடி)

கரவெட்டிப் பகுதியில் காணியற்ற மீனவர் குடும்பங்கள் முல்லைத்தீவுத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த சுண்டிக்குளம் பகுதியில் குடியமர்த்தப்படவுள்ளார்கள்.

இம் மீனவர் குடியேற்றத் திட்டத்தின்கீழ் குடியமர்த்தப் படுபவர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 30 திகதி கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இச் சுண்டிக்குளம் பகுதியில் தொழில் புரிந்த மீனவர்களுக்கு நேர்முகப்பரீட்சையில் முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தலா அரை ஏக்கர்நிலம் வழங்கப்படும். இவர்கள் தமக்கு வழங்கப்பட்ட காணியினுள் 3 மாதக் காலத்தில் நிரந்தரமாக குடியேருதுவிடின் காணிகள் ரத்தாகும் என கூறப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த
ராமன்தேடியசீதை

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கைகொடுத்த
தெய்வம்

**ஸ்ரீதர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, மாலினி பொன்சேகா, ஸ்ரீதேவி, ஜெய்சித்ரா
பைலட் பிரேம்நாத்
விரைவில்
எம். ஜி. ஆர். - லதா நடித்த
மீனவ நண்பன்

**வெலிங்டன்**
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
THE DEEP

**லிடோ**
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45
7-15, 9-45
Foul Play

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 6-30, 9-45
75—வது வெற்றித் திருநாளை நோக்கி ..
நீயா?
கமல், லதா, ஸ்ரீபிரியா,
மஞ்சுளா, விஜயகுமார்,
நம்பியார், சுருளி
இசை: சங்கர் — கணேஷ்
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீபிரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 4-45, 7-00, & 9-45
SEAN CONNERY, RICHARD BURTON in
SHALAKO
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

**WINDSOR** (JAFFNA)
IT'S EVIL...... IT'S HORRIFIC
IT'S CONCEIVED BY THE DEVIL
Daily 4 Shows
Daily at 10-30 a. m, 2-00, 4-30, & 7-00 p. m. only
JOAN COLLINS — EILEEN ATKINS
RALPH BATES — DONALD PLESANCE
in
"I DON'T WANT TO BE BORN"
Color – Adults only

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 10- ம் திகதி
(வெள்ளிக்கிழமை)
(26 - 9 - 1980)

மேடம்: இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும், பிறந்தகத்தின் நினைவு திடீரெனத் தலை தூக்கும், கடமையில் சோர்வு தென்படும், மனத்திடம் வேண்டும்.

இடபம்: சொற்சிலம்பம் ஆடுவதன் மூலம் மற்றவர்களைச் சொக்கவைப்பீர்கள், சிலர் தேர்தல் விவகாரங்களிலும் ஈடுபடலாம், குடும்பத்தில் அமைதி நிலவும், பெரியவர்களுடன் உறவுகள் பலப்படும்.

மிதுனம்: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும், உணர்ச்சியைத் தூண்டும் எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம்.

கடகம்: காரியத்தில் வெற்றிகிடைக்கும், கவர்ச்சியான சம்பவங்களுக்கும் இடமுண்டு. புதிய தொழிலில் ஈடுபாடு ஏற்படலாம், நண்பர்கள் ஆதரவு தருவார்கள்.

சிங்கம்: உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள், இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள், பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம், பொருள் வரவுக்கும் இடமுண்டு.

கன்னி: முயற்சியால் சிக்கல்கள் தோன்றும், அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர், தொழில் துறையிலும் தலைமறைவு நடவடிக்கைகள் உருவாகலாம், மேலதிகாரிகளின் கட்டளைக்குப் பயந்து நடக்கவும்.

துலாம்: இதயம் இன்று இன்பத்தால் விம்மும், குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் அன்புகொண்டதாக இருக்கும், புத்திரர்களாலும் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு, சுமுகமான தினம்.

விருச்சிகம்: கடமையில் தடை ஏற்படும், பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும், தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

தனுசு: நீண்டகாலத்தின் பின்பு இன்று மனதுக்குப் பிடித்த ஒரு சம்பவம் நடைபெறும், முதியவர் உமக்கு வழிகாட்டியாக இருப்பார், ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் செலுத்துவீர்கள், நல்ல தினம்.

மகரம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள், பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும், சொந்தமாகத் தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும் அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வு கிடைக்கலாம்.

கும்பம்: வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும், நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும், மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மீனம்: நத்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்துகொண்டிருக்கும், மனத்தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும், வேண்டாத தொடர்பால் தவறான போக்குக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
**க. வேலுப்பிள்ளை**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
எம் ஜி ஆர் - சரோஜாதேவி
பணக்காரக் குடும்பம்
(புதிய பிரதி)

## அருளம்பலம் இல்லம்
# சாம்பியன் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது

(அரியாலை)
யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் அருளம்பலம் இல்லம் 255 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. ஏனைய இல்லங்களான கனகரத்தினம் இல்லம் 218 புள்ளிகளையும், பெரேரா இல்லம் 217 புள்ளிகளையும், சோமசுந்தரம் இல்லம் 202 புள்ளிகளையும் பெற்றன.

பெண்களுக்கான போட்டிகளில் 13 வயதுப்பிரிவில் செல்வி எம். மெக்கலாவும், 15 வயதுப்பிரிவில் செல்வி ரி. சைலற்றுவும், 17 வயதுப் பிரிவில் செல்வி எம். காந்திநிதியும், 19 வயதுப்பிரிவில் செல்வி எஸ். உமாபதியும், 19 வயதுக்கு மேற்பட்டோருக்கான பிரிவில் செல்வி எம். ரோகினியும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்களுக்கான போட்டிகளில் 13 வயதுப்பிரிவில் செல்வன் பி. ரவிச்சந்திரனும், 15 வயதுப்பிரிவில் செல்வன் ஆர். இராசபாலனும், 17 வயதுப் பிரிவில் செல்வன் என். நகுலேஸ்வரனும், 19 வயதுப் பிரிவில் செல்வன்கள் கே.எஸ். மோகனதாசும், ஏ. ரஜீவ்வும், ஏ. யே. ஈ. ரவிக்குமாரும், 19 வயதுக்கு மேற்பட்டோருக்கான பிரிவில் செல்வன் பி. குமாரனும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அணிநடைப் போட்டியில் சோமசுந்தரம் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது. உயிர்முறைவைப் போட்டியில் முதலாவது இடத்தை கனகரத்தினம் இல்லமும், இரண்டாம் இடத்தை அருளம்பலம் இல்லமும், மூன்றாவது இடத்தை சோமசுந்தரம் இல்லமும் பெற்றன. அஞ்சலோட்டப் போட்டியில் கனகரத்தினம் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது.

பழைய மாணவிகளுக்கான போட்டியில் 1ம் இடத்தை செல்வி எஸ். கே. நிர்மலாவும், 2ம் இடத்தை திருமதி ஜோய் பீல்கினும் பெற்றனர், பழைய மாணவர்களுக்கான போட்டியில் 1ம் இடத்தை திரு. எஸ். சண்முகலிங்கமும், 2ம் இடத்தை திரு. பி. வசந்தகுமாரும் பெற்றனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான விருதுகளையும், கிண்ணங்களையும், கேடயங்களையும் திருமதி கே. அரியரத்தினம் வழங்கினர். (க)

# "சிறந்த பயிற்சிபெற்றால் வெற்றி நிச்சயம்"

(அரியாலை)
போட்டிகளில் வெற்றிபெறுவது முக்கியமாகாது. ஆனால் அந்தப்போட்டிகளுக்கு வேண்டிய பயிற்சியை ஒழுங்கான முறையில் பெறுவதுதான் முக்கியமாகும். போட்டிகளுக்கான பயிற்சியை சிறந்தமுறையில் பெற்றவர்கள் போட்டிகளில் வெற்றிபெறுவது சுலபமாகும். இதைப்போல மாணவர்கள் தமது கல்வியிலும் போதிய முயற்சி செய்து முன்னேற முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் அதிபர் திரு. யே. எஸ். அரியரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. அர். எஸ். செல்வத்துரை தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் திரு. அரியரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது மாணவர்களிடையே போட்டியிருக்கலாமே தவிர அது பொறாமையாக மாறக்கூடாது. வெற்றியையும், தோல்வியையும் நாம் சமமாக மதிக்கவேண்டும். போட்டியின் மூலமே எமது திறமைகளை நாம் வெளிப்படுத்தமுடியும். போட்டிகள் சிநேகிதத்தை வளர்க்கும் மனோபாவத்தை உண்டாக்க வேண்டும்.

போட்டிகளில் ஏற்படும் வெற்றியையும், தோல்வியையும் நாம் சமமாக மதிச்சப் பழகினால் நமது வாழ்க்கையில் ஏற்படும் சகல பிரச்னைகளையும் நாம் தீர்த்து வைக்கமுடியும்.

# உற்சவம்



கொழும்புத்துறை புனித செபமாலை அன்னையின் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை வண. பிதா. மகேந்திரம் இராசநாயகம்அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து தினமும் ஆராதனை திருப்பலிபூசை மாலை 6-30 மணிக்கு நடைபெறும். அடுத்த மாதம் 4ம் திகதி ஆராதனை திருப்பலி பூசையை அடுத்து நற்கருணைப் பவனியும், 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 7மணிக்கு திருநாள் கூட்டுத்திருப்பலிப் பூசையும் அதைத்தொடர்ந்து செபமாலை மாதாவின் திருச்சொரூபபவனியும் நடைபெறும்.

# ஆண்டுவிழா

(பண்டத்தரிப்பு)
பெரியவிளான் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின்20வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இம் மாதம் 27 ம் திகதி நடைபெறவுள்ளது. பங்குத் தந்தை வணபிதா. சகாயநாதன் அடிகளார் இவ் விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொள்வார். (க)

**ராஜா** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் மு. கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
மக்கள் கலைஞர் ஜெய்சங்கரின் அருமையான சண்டைக் காட்சி.
அருமையான பாடல்களுடன் குழுகுழு கலரில் உருவான ஒப்பற்ற திரைக் காவியம்.
ஜெய்சங்கர், ஜெயசித்திரா, அசோகன், எம். ஆர். ராதா,
எஸ், வி. சுப்பையா நடிக்கும்
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 ஆம் வகுப்பு
புதிய விஞ்ஞானம்
வினு—விடை

தாவர விலங்குகளைப் பாகு படுத்தும் இருகிளைத் திறவு கோள் முறை உட்பட விளக்கக் குறிப்புகளும் உள்ளன.
ஆலோசனை செ. வேலாயுதபிள்ளை
விலை 3-25 B.A; Sc. Trd.

காந்தளகம்
213 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU

## யாழ். மாநகரசபையின் சுகாதாரவாரம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகரசபை நாளை முதல் சுகாதார வாரத்தைக் கொண்டாடவுள்ளது. இதனையொட்டி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர் முதல்வர் திரு. இ. விசுவநாதன், உபகாப்பாளர் திரு. சிவஞானம், திரு. மு. வேதாரணியம், தலைவர் திரு. பிலிப் சேவையர், உபதலைவர் திரு. பி. ஜெகநாதன், பொருளாளர் திரு. எஸ். ஆர். லோகநாதன். (வெ)

## சங்கராச்சாரியார் 'இராசுவுக்கு' வாழ்த்து

(மட்டக்களப்பு)
மொரிஷியஸ் தீவிற்கு சைவ ஆலயங்களில் பூசை செய்ய அர்ச்சகர் அனுப்பி வைக்கப்பட்டமை திருக்கேதீஸ்வரத்தில் சிவாச்சத்திரியார் களுக்கான பயிற்சி நிலையம் நிறுவப்பட்டமை ஆகியன குறித்து நடமாடும் தெய்வமான சங்கராச்சாரியார் சுவாமிகள் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு செல்லையா இராசதுரைக்கு வாழ்த்துக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

### ரியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கு:

# நீதவான்முன் ஒப்புதல் வாக்குமூலம் குறித்து 1ம் எதிரியிடம் கேட்டதை பதியத்தவறிவிட்டோம்

## றைபிளோ தோட்டாக்களோ எடுத்துச் செல்ல சப்-இன்ஸ்பெக்டருக்கு அனுமதி கொடுக்கவில்லை

### உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

"கமலம் கொலை சம்பந்தமான 1ம் சந்தேக நபரை சிறைச்சாலையிலிருந்து தக்க பாதுகாப்பாக அழைத்து வருமாறு சப். இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதிக்குப் பணித்தேனே தவிர றைபிளோ, தோட்டாக்களோ எடுத்துச் செல்ல நான் அனுமதி கொடுக்கவில்லை."

இவ்வாறு பொலிகண்டி ரியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த யாழ். குற்றவியல் பகுதி உதவி பொலீஸ் அத்தியட்சகர் ஜனுப் எம். எஸ். எம். நிசாம் 1ம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினத்தால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

1ம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினத்தால் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்பட்ட உதவிப்பொலீஸ் அத்தியட்சகர் நிசாம் குறிபிட்டதாவது.

3-4-80ல் நானும் உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. இரத்தினசபாபதியும் காலை 7-30 மணிபோல் யாழ். சிறைச்சாலைக்குச் சென்றோம். அங்கு 1ம் எதிரியின் வாக்குமூலம் காலை 10.30 மணிக்குத் தான் பதிய ஆரம்பிக்கப்பட்டது. நானும் இரத்தினசபாபதியும் இந்த எதிரிகளை 3 மணித்தியாலங்கள் விசாரித்தோம். 3 மணித்தியாலங்கள் விசாரித்தபின்னர் தான் வாக்குமூலம் பதியப்பட்டது. விசாரணை செய்யும் போது இரு எதிரிகளையும் விசாரணை செய்தோம். இரு எதிரிகளையும் கேள்விகள்கேட்டோம். யார் கூடக் கேள்விகள் கேட்டது என்று என்னல் சொல்ல முடியாது.

பிராது அணைக்கப்படும் வரை இந்த விசாரணையில் கட்டளைகளை நானே பொலீசாருக்குக் கொடுத்து வந்தேன். இந்த வழக்குத் தாக்கல் செய்தபின் பருத்தித்துறைப் பொலீஸ் அதிகாரி இவ்வழக்கு சம்பந்தமாக அறிக்கைகள் சமர்ப்பித்தாரா என்பது எனக்கு ஞாபகமில்லை. 2ம் எதிரி எந்தத் திகதியில் பிணை அனுமதிக்கப்பப்பட்டார் என்பது எனக்குத் தெரியாது. ஒரு பிணை விண்ணப்பம் செய்தால் அதையிட்டு பொறுப்பதிகாரி அறிவிக்க வேண்டிய அவசியமில்லை, ஆனல் இந்த வழக்கில் தனக்கு அறிக்கை வந்திருப்பதாகப் பொறுப்பதிகாரி எனக்குச் சொன்னர். நான் பருத்தித்துறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அரசசட்டத்தரணியின் ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுக்குமாறு சொன்னேன்.

1ம் எதிரி எங்களுக்குச் சொன்ன தகவல்களின் பேரில் வாக்கு மூலத்தைப் பதிந்தோம். 1ம் எதிரியை விசாரணை செய்த பின்னர்ரே அவர் என்ன கூறப்போகிருர் என்பது எனக்குத் தெரியவந்தது.

அவரது சப் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதி சாட்சியமளிக்கையில், வாக்குமூலம் கொடுத்து முடியும்வரைக்கும் அது ஒப்புதல் வாக்குமூலமென்று தனக்குத் தெரியாதென்று சொல்லியிருந்தால் அவருக்கு தெரிந்தது அவ்வளவு தான்.

1-ம் எதிரியை நாங்கள் வாயால் கேள்வி கேட்டு அவர் மறுமொழி கொடுத்தபின்பே அவர் தருவது குற்றத்தை ஒப்புக்கொள்ளும் வாக்குமூலம் என்பது எனக்குத் தெரியும். அத்தோடு 1-ம் எதிரி 4-3-80ல் பொலிசுக்குச் கொடுத்த வாக்குமூலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட வாக்குமூலம் என்று அப்படி எனக்குத் தெரிந்துகொண்டும் நான் 1-ம் எதிரி இப்படி ஒரு வாக்குமூலம் அளித்திருக்கிருர்என்று நீதிமன்றதின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. ஏனென்ருல் 1-ம் எதிரி 3-4-80 ல் சிறைச்சாலையில் இருந்து கொடுத்த வாக்குமூலம் முற்றிலும் மாறுபட்டிருந்தபடியாலும் எது சரி எது பிழை என்று தெரியாதபடியாலும் மேலும் இதை மேற்கொண்டு விசாரணை செய்வதற்காகவும் தான் நான் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரவில்லை.

சட்: அதாவது 1-ம் எதிரியை நீங்கள் வாயால் கேள்விகள் கேட்டு அவர் அதற்கு வாயால் மறுமொழி சொன்னதிலிருந்து உமக்குத் தெரியும் 1-ம் எதிரி கொடுக்கும் வாக்குமூலம் ஒப்புதல் வாக்குமூலம் என்று?

அப்படியான வாக்குமூலத்தை நாங்கள் பதிவதற்கு சட்டத்தில் எங்களுக்கு எது வித தடையும் கிடையாது.

சட்: நீர்ஏன் சொல்லவில்லை? 1-ம் எதிரிக்கு அடுத்தமுறை நீதிமன்றத்தில் சொல்லலாமென்று? 1-ம் எதிரி நீதிமன்றத்தில அப்படிச் சொல்ல விரும்பவில்லை.

சட்: ஏன் விரும்பவில்லை என்று கேட்கவில்லையா? அவர் எங்களுக்குக் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தை நீதவானுக்குக் கொடுப்பதாகத் தெரிவிக்கவில்லை.

சட்: அதாவது அப்படி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க விரும்பாதவிடத்திலும் நீங்கள் நீதவானுக்குப் பதிலாக இருக்கும் இடத்தில் இருந்து அந்த வாக்குமூலத்தை [illegible] தான் [illegible]

#### தவறிவிட்டோம்

சட்: நீர் 1ம் எதிரியினுடைய ஒப்புதல் வாக்குமூலம் எடுக்குமுன் அவரிடம் கேட்டீரா இப்படியான ஒப்புதல் வாக்குமூலத்தை நீதவானிடம் கொடுக்க விரும்புகிறீர்களா என்று?-பதிந்த பின் அப்படிக் கேட்டோம். ஆனல் 1ம் எதிரி தான் நீதவானுக்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க விரும்பவில்லை என்று சொன்னர். இப்படி ஒப்புதல் வாக்குமூலம் எடுத்த பின் 1ம் எதிரி நீதவான் முன்னல் இந்த வாக்குமூலத்தைக் கொடுக்க விரும்புகிறீரா என்று கேட்டதை நானோ இரத்தினசபாபதியோ குறிப்பெடுத்துக் கொள்ளவில்லை. அந்தக் குறிப்பு பதியப்பட்டிருக்கவேண்டும். அதில் தவறிவிட்டோம்.

சட்: நான் உமக்குச் சொல்கிறேன். நீரோ, சப் இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதியோ 1ம் எதிரிக்கு அது பற்றி எப்போதாவது சொல்லவில்லை. 1ம் எதிரி நீதவானிடம் அப்படி ஒரு வாக்குமூலம் கொடுக்க விரும்பினல் கொடுக்கும்படி?- நான் நிச்சயமாகச் சொன்னேன்.

சட்: நீர் உமது சாட்சியத்தில் முன் சொல்லியுள்ளீர். சந்தேகப்பேர்வழி ஒருவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால் அதை எடுப்பதற்கு சட்டம் தடைசெய்யவில்லை என்று:-ஆம்.

சட்: பொலிசாருக்குக் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றத்திலே அனுமதிக்கப்படாது என்று உமக்குத் தெரியும்?-ஆம். என்ருலும் எனக்குத் தெரிந்துகொண்டும் 1ம் எதிரியினுடைய ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதுவித்தேன்.

சட்: நீர் சற்று முன்பு சொன்னீர் 1ம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எடுத்ததை நீதவானுக்கு அறிவிக்கவேண்டிம் அவசியம் இல்லையென்று. அதற்கு காரணம் சொன்னீர். தொடர்ந்து விசாரணைசெய்ய வேண்டியிருப்பதால் அதைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென்று 3-6- 0 வரை தகவல் புத்தகத்தின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகள் ஒப்படைக்கப்படவில்லை என்பது தெரியுமா? இல்லை. (இ)

## ஈராக் தலைநகர்மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று ஈராக் அறிவித்துள்ளது.

### பரசூட் வீரர் படுகொலை

பக்தாக்தின் வடகிழக்குப் பிரதேசத்தில் பரசூட் மூலம் குதித்த ஈரானிய வீரர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று ஈராக் தெரிவித்தது.

### கார்ட்டர் கோரிக்கை

இருநாடுகளும் உடனடியாகப் போரை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் இரு நாடுகளையும் கேட்டுள்ளார்.

### சவூதி அரேபியா ஆதரவு

ஈராக்குக்கு சவூதி அரேபியா மீண்டும் ஆதரவு தெரிவித்துள்ளது. சவூதி அரேபிய மன்னர் காலித் இன்று ஈராக் ஜனதிபதி ஜனுப் ஹுசெய்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஈராக்குக்கான தமது நாட்டின் ஆதரவை மீண்டும் தெரிவித்தார் என பாக்தாத் செய்திகள் தெரிவித்தன.

### மேலும் 7 இந்தியர் பலி!

ஈராக் 'பஸ்ரா' எண்ணை உற்பத்தி நிலையம் மீது ஈரானிய படைகள் தாக்கியபோது காயமடைந்த 25 இந்தியர்களில் 7 பேர் மரணமானுர்கள். (இ)

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ° உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
° அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ° பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது நாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் செப். 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. GB 8948/78 The Eelanaadu P. B. No. 49.
Telegram EelanaaPud . ૨૦ynક3